# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
பேரூர் மற்றும் சிங்காநல்லூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 5063 / 2009 / எம்சி. 8 நாள் : 15 .6.2009**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 22.06.2009 திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

15/06/09
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்
## ஜூன் 2009

### நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | பொதுப் பிரிவு - வார்டு குழு, நிலைக்குழு முதலியவற்றிக்கு நிர்வாக அனுமதி வரம்பு உயர்த்தப்பட்டது – அரசு ஆணை- மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக (இணைப்பு - 1) |
| 2 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 53 – செல்வபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளி – அபிவிருத்திப் பணி செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 45 – ராஜ வீதி – மாநகராட்சி பிரசவ விடுதி – அபிவிருத்தி பணி செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்தி பணிகள் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 33- டாடாபாத் ஆரம்ப பள்ளியில் அபிவிருத்தி பணி செய்தல் - ஒப்பந்ததாரர் டேவணித் தொகையை திரும்பக் கோருதல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 36 – சீதாலட்சுமி மாநகராட்சி பிரசவ விடுதி - அபிவிருத்திப் பணி செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - அவிநாசி சாலையில் மின்விளக்குகள் அமைத்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | நகரமைப்புப் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 38 – திரு போத்திராஜ் - நகரளவு எண்கள் 927, 971 – நில பரிவர்த்தனை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 9 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - திரு சௌந்தரராஜ் - நகரளவு எண் 1366/5 – பலஅடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 10 | பொதுப் பிரிவு - அகில இந்திய மேயர்கள் மன்றம் - ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 11 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - தி/வா. பி.எஸ்.ஆர். சில்க் சாரீஸ் இந்தியா பிரைவேட் லிட், - நகரளவு எண் 238/1.2 – பலஅடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 12 | பணியமைப்பு - 7 டெக்ஸ்கோ காவலாளிகள் -ஒப்பந்த காலம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 13 | பணியமைப்பு - 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் -ஒப்பந்த காலம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 14 | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - பவுண்டேசன் ஒன் இன்பராஸ்ட்ரெக்சர் பி.லிட்,- நகரளவு எண் 358, 359 – பலஅடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 15 | நகரமைப்புப் பிரிவு - தெற்கு மண்டலம் -தி/ வா. அக்ஷயா ஹோம்ஸ் பி. லிட் - நகளரவு எண்கள் 1323/1 உள்ளிட்டவை - பலஅடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | வருவாய் பிரிவு - தொழில் வரி உயர்வு செய்யப்பட்டது -1.10.2008 முதல் அமுல்படுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 17 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - க.ச.எண். 395/1 - பலஅடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **18** | நகரமைப்புப் பிரிவு - திருவள்ளுவர் சிலை அமைத்தல் - ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல் -மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| **19** | நகரமைப்புப் பிரிவு - திட்டச் சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்துதல் - செலவினம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **20** | நகரமைப்புப் பிரிவு - நீச்சல் குளம் அமைத்தல் -கோ ஆப்டெக்ஸ் பொருட்காட்சித் திடல் - தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்திற்கு 1.36 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் வழங்குதல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| **21** | தெற்கு மண்டலம் - 2009-10 ஆண்டிற்கான ஏல உரிம இனங்கள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக (இணைப்பு - 2) |
| **22** | வடக்கு மண்டலம் - பட்டேல் ரோடு வணிக வளாக கடைகள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **23** | வடக்கு மண்டலம் - 4 ஏலஇனங்கள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **24** | கிழக்கு மண்டலம் - 2009-10 ஆண்டிற்கான ஏல உரிம இனங்கள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக (இணைப்பு - 3) |
| **25** | மேற்கு மண்டலம் - 2009-10 ஆண்டிற்கான ஏல உரிம இனங்கள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **26** | கிழக்கு மண்டலம் - 2009-10 ஆண்டிற்கான ஏல உரிம இனங்கள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **27** | கிழக்கு மண்டலம் - புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் - சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு உரிமக்காலம் நீடித்து வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **28** | குடிநீர் விநியோகப் பிரிவு - குடிநீர் கட்டணம் திருத்தி அமைத்தல் மற்றும் குடிநீர் விநியோக துணை விதிகள்- மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. (இணைப்பு - 4) |
| **29** | கணக்குகள் பிரிவு - புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் - பங்களிப்பு பிடித்தல் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| **30** | பொறியியல் பிரிவு - பாதாள சாக்கடை திட்டம் - இணைப்புக் கட்டணம் மாற்றியமைத்தல் - துணை விதிகள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. (இணைப்பு - 5) |
| **31** | நகரமைப்புப் பிரிவு - அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகள் முறைப்படுத்துதல் -16 அடிக்கும் குறைவாக அணுகு சாலைகள் கொண்ட மனைப் பிரிவுகள் - வரன்முறைப்படுத்த அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்புதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **32** | கணக்குகள் பிரிவு - ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவி திட்டம் அமுல்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **33** | Jnnurm –பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - வனத்துறை நிபந்தனைகள் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **34** | Jnnurm –பில்லூர் 1-ம் குடிநீர் திட்டம் - சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கு 6 எம்.எல்.டி குடிநீர் வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **35** | Jnnurm –பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - சிப்பம் 6 – மாநில ஒப்பந்தப் புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரை ஏற்றல் - மாமன்றம் பதிவு செய்தல் -தொடர்பாக |
| **36** | கணக்குகள் பிரிவு - குத்தகை இனங்கள் - அரசு ஆணை – பதிவு செய்தல் - தொடர்பாக (இணைப்பு - 6) |
| **37** | நகரமைப்பு பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 33- மீன்வளத்துறையினருக்கு கூடுதல் இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **38** | நகரமைப்புப் பிரிவு - வ.உ.சி. பூங்கா திடலில் வ.உ.சி. திருவுருவ சிலை அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **39** | நகரமைப்பு பிரிவு - ரேஸ்கோர்ஸ் தாமஸ் பூங்கா அருகில் போர் நினைவு சின்னம் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **40** | பொறியியல் பிரிவு –2009-10 - பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை – தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை – பதிவு செய்தல் -தொடர்பாக |
| **41** | பொறியியல் பிரிவு - 12வது நிதிக்குழு பரிந்துரை மானியம் - பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| **42** | தேர்தல் - மின்னனு வாக்குப் பதிவு இயந்திரங்கள் எடுத்துவர ஏற்பட்ட செலவினங்கள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **43** | Jnnurm – பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **44** | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் I பணி – ஒப்பந்த விலைப்புள்ளி முடிவு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **45** | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் II பணி – ஒப்பந்த விலைப்புள்ளி முடிவு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **46** | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் III பணி – ஒப்பந்த விலைப்புள்ளி முடிவு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **47** | Jnnurm – பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் -ராமகிருஷ்ணாபுரத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல் பணி – சுற்றுச்சுவர் முதலியன அமைத்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **48** | Jnnurm – பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - வெள்ளியங்காட்டில் நீர்சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி – சுற்றுச்சுவர் முதலியன அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **49** | நகரமைப்புப் பிரிவு - பயணிகள் நிழற்குடை அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |

நன்றியுரை

இணைப்பு - 6

அ) <u>திருக்குறள்</u>

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(குறள் -26)

## <u>விளக்கம்</u>

பெருமை தரும் செயல்களைப் புரிவோரைப் பெரியோர் என்றும், சிறுமையான செயல்களையன்றிப் பெருமைக்குரிய செயல்களைச் செய்யாதவர்களைச் சிறியோர் என்றும் வரையறுத்து விடமுடியும்.

திருவள்ளுவர்.

---

## <u>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

**<u>சிறப்புத் தீர்மானம் 1</u>**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நமது கோவை மாநகராட்சியில் ரூ.3186 கோடியில் பல்வேறு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஆசியாவின் ஜோதி, மனிதருள் மாணிக்கம், பண்டித ஜவஹர்லால் நேருவின் திருவுருவச் சிலையை இம்மாநகராட்சியில் அமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

எனவே கோவை மாநகராட்சியில் Jnnurm அலுவலக கட்டிடத்தின் முன்புறம் நேருவின் திருவுருவச் சிலையை அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றவேண்டுமாய் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாமன்ற குழுவின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**<u>சிறப்பு தீர்மானம் எண்: 1 நாள்: 22.06.2009</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**<u>சிறப்புத் தீர்மானம் 2</u>**

தமிழக அரசின் உள்ளாட்சித்துறை அமைச்சராக மிகச் சிறப்பாக பணியாற்றி வருபவரும் கால் நூற்றாண்டுகளாக அரசியல் பொது வாழ்வில் பல்வேறு தியாகங்கள் செய்தவரும், தமிழக இளைஞர்களின் எழுச்சி நாயகராகவும் திகழ்ந்து வருபவருமான மாண்புமிகு அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் பரிந்துரையால் தமிழக துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு கோவை மாநகராட்சி மாமன்றம் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், தெரிவித்துக் கொள்கிறது. அவரது அளப்பரிய திறமையால் தமிழகம் மென்மேலும் சிறக்க இம்மாமன்றம் வாழ்த்துக்களை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமாய் தி.மு.க. மாமன்ற குழுவின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**<u>சிறப்பு தீர்மானம் எண்: 2 நாள்: 22.06.2009</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**<u>சிறப்புத் தீர்மானம் 3</u>**

இந்திய திருநாட்டின் முதல் பெண் சபாநாயகராக ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த திருமதி. மீரா குமாரி அவர்களுக்கு இம்மாமன்றம் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமாய் தி.மு.க மாமன்ற குழுவின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**<u>சிறப்பு தீர்மானம் எண்: 3 நாள்: 22.06.2009</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 1

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – அவசர சட்டம் எண் 6/2008- வெளியிடப்பட்ட நகல் பெறப்பட்டது –மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

பார்வை - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை கடிதம் எண். 253/தேர்தல் /08-2, நாள் 01.09.2008.

-------------

பார்வையில் கண்டுள்ள அரசு கடிதத்தில், அவசர சட்டம் எண். 6-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் பிரசுரம் எண். 258, நாள் 26.08.2008-ல் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர், வணக்கத்திற்குரிய மேயர், வார்டு கமிட்டி, நிலைக்குழுக்கள் மற்றும் மாமன்றத்திற்கு நிர்வாக அனுமதி வரம்பு உயர்த்தப்பட்டுள்ளமையின் அரசிதழ் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண். 13220/08/எம்.சி. 1

## மாநகர மன்ற தீர்மானம் எண்: 1 நாள்: 22.06.2009

தமிழ்நாடு அரசு அவசர சட்டம் எண். 6/2008 ஐப் பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 02.03.2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்த-தாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9010/08/ எம்.டி.4 | வார்டு எண் 53-ல் செல்வபுரம் வடக்கு மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் ஏ.சி கூரையை மாற்றி கான்கிரீட் கூரையாக மாற்றவும் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 10.05 | 20.02.2009 இரண்டாம் அழைப்பு | திருமதி. யு. மணி | 3.61 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிக்கு பொறியியல் விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 7870/08/எம்.டி.4

## மாநகர மன்ற தீர்மானம் எண்: 2 நாள்: 22.06.2009

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 3

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 45 ராஜ வீதியில் உள்ள பிரசவ வார்டில் கூடுதலாக பிரசவ விடுதி கட்டும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மதிப்பீடு ரூ. 15,00,000/-த்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு 06.02.2009 நாளன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு 13.02.2009 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|
| 1 | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.22 % அதிகம் |
| 2 | தி/ள். பூஜா இன்ஜினியர்ஸ் | 23.92 % அதிகம் |

எனவே மதிப்பீட்டிற்கு 4.22% அதிகமாக பெறப்பட்டுள்ள தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் அவர்களின் ஒப்பந்தப் புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மேற்படி பணி சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறுஒப்பந்தப் புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9443/08/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 3 நாள்: 22.06.2009**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு மாநகராட்சி நிதியின் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 02.03.2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பேயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5212/08/ எம்.டி.2 | வார்டு எண் 10 மற்றும் 11–ல் உள்ள ஜீ.வி.மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் வரதராஜபுரம் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் தொட்டிகளுக்கு வர்ணம் பூசுதல் | 6.70 | 10.02.2009 இரண்டாம் அழைப்பு | திரு.கே. ராமசாமி | 4.69 அதிகம் | 1.22 அதிகம் |
| 2 | 10186/ 08/ எம்.டி.2 | வார்டு எண் 2 பீளமேடு மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கழிப்பறை கட்டுதல். | 7.20 | 10.02.2009 இரண்டாம் அழைப்பு | திரு.ஏ. விஜயகுமார் | 4.70 அதிகம் | 3.97 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- வரிசை எண்.1 மற்றும் 2-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5212/08/எம்.டி 2

மாநகர மன்ற தீர்மானம் எண்: 4 நாள்: 22.06.2009

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு மாநகராட்சி நிதியின் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 05.02.2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப் புள்ளியை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பேயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11134/ 08/ எம்.டி.2 | வார்டு எண் 33–ல் டாடாபாத் ஆரம்ப பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 25.00 | 20.01.2009 மூன்றாம் அழைப்பு | திரு எஸ். துரைராஜ் | 2.20 அதிகம் | 2.03 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற 17.02.2009-ம் தேதிய ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. தேர்தல் நடைமுறை விதிகளின் படி மாமன்றக் கூட்டம் இதுவரை கூடவில்லை.

தற்போழுது ஒப்பந்ததாரர் திரு. எஸ்.துரைராஜ் 19.05.2009 அன்று இவ்வலுவலகத்தில் அளித்துள்ள கடிதத்தில், தான் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்து 110 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது எனவும், தற்போழுது தன்னால் இப்பணியை மேற்க்கொள்ள இயலாது எனவும் தான் செலுத்தியுள்ள டேவணித் தொகையை திரும்ப வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவை மாநகராட்சி பொறியியல் பணி விதிகளின் படி (Engineering Manual 15.clause Bid Validity 15.1) –ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "Bids shall remain valid for a period not less than ninety days after the deadline date for bid submission specified in 'Clause 20'. A bid valid for a shorter period shall be rejected by the Employer as non- respective. என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் நடைமுறை விதிகளுக்குட்பட்ட காலம் 02.03.2009 பிற்பகல் முதல் 19.05.2009 (தேர்தல் ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதம் எண்-1782/2009-15 நாள்.19.05.09 இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் 23.05.2009) வரை ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கும் காலமாக இடைப்பட்ட 82 நாட்களை கணக்கில் எடுத்துக்கோள்ள இயலாது.

எனவே, ஒப்பந்தப்புள்ளியை இவ்வொப்பந்ததாரா் சமா்ப்பித்த 20.01.2009 முதல் 23.05.2009 வரை, 90 நாட்களுக்கும் குறைவாகவே உள்ளது. எனவே இவ்வொப்பந்தப் புள்ளியை ஏற்கலாமா? அல்லது இந்த ஒப்பந்தப் புள்ளியை ரத்து செய்து விட்டு மறு ஒப்பந்தப் புள்ளி கோரலாமா? என்பது குறித்தும் இந்த ஒப்பந்ததாரா் இப்பணிக்கு செலுத்தியுள்ள டேவணித்தொகையை திரும்ப வழங்குவது குறித்தும் மாமன்றம் முடிவு செய்ய பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண் -11134/08/எம்.டி.2

**மாநகர மன்ற தீா்மானம் எண்: 5 நாள்: 22.06.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு, விலைக்குறைப்பிற்குப் பின் மதிப்பீட்டைக்காட்டிலும் 2.03% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எஸ். துரைராஜ் அவா்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் ஒப்புதல் வழங்கவும், இப்பணியினை திரு. எஸ். துரைராஜ் ஒப்பந்ததாரா் அவா்களே மேற்கொள்ள அனுமதிக்கவும் தீா்மானிக்கப்பட்டது. ஒப்பந்ததாரா் இப்பணியினை செய்ய மறுத்தால் டேவணித் தொகையினைப் பறிமுதல் செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் கூடுதல் தொகை செலவினம் ஏற்படின், அக்கூடுதல் தொகையினை ஒப்பந்ததாரா் திரு.எஸ். துரைராஜ் அவா்களிடமிருந்து வசூல் செய்யலாம் எனவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 05.02.2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பேயா் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14811/ 07/ எம்.டி.4 | வாா்டு எண் 36–ல் சீதாலட்சுமி மாநகராட்சி பிரசவ விடுதியில் நவீன வசதிகளுடன் முதல் தளம் கட்டுதல் | 25.00 | 07.01.2009 நான்காம் அழைப்பு | தி/ள். N.P.K. அசோசியேட்ஸ் | 4.76 அதிகம் | 3.53 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 14811/07/எம்.டி 4

**மாநகர மன்ற தீா்மானம் எண்: 6 நாள்: 22.06.2009**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

கோவை மாநகராட்சி பகுதியில் உள்ள அவினாசி சாலையில் நஞ்சப்பா சாலையின் தொடக்கம் முதல் சித்ரா வரையிலான புதிதாக விரிவுபடுத்தப்பட்ட 6 வழி மாநில நெடுஞ்சாலையின் நடுவே தனித்த மின்கம்பங்களுடன் கூடிய 250 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க எட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இருந்தன.

இந்நிலையில் அரசு செய்தி அறிக்கை (Govt Gazette) ப.எண். 192 நாள் 26.08.2008-ன்படி ரூ. 1.00 கோடி மதிப்பீட்டிற்கு மேல் உள்ள பணிகள் அரசின் அனுமதி வரம்பிற்குள் வருவதால் இப்பணிகளுக்கு மின்கம்பங்களுடன் கூடிய 250 வாட்ஸ் மெட்டல் ஹாலைடு விளக்குகள் மற்றும் எட்டு உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்கும் புதிதாக ரூ. 3.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளது.

எனவே, இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 3.00 கோடிக்கு அரசின் அனுமதி வேண்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட எட்டு மதிப்பீடுகளையும் ரத்து செய்யலாம்.

ந.க.எண். 6121/09/MD 3

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 7 நாள்: 22.06.2009</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மெட்டல் ஹாலைடு விளக்குகளுக்குப் பதிலாக, ஏற்கனவே அனுமதி அளித்துள்ளவாறு சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும், ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட எட்டு மதிப்பீடுகளையும், ரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. இப்பணிக்கென ரூ.3.00 கோடிக்கு அரசின் அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனரகத்திற்கு பரிந்துரை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண். 38, என்.எச். சாலையில் இருந்து கிழமேலாக செல்லும் 7 அடி அகல சௌடம்மன் கோவில் மாநகராட்சி சந்தின் கடைசியில் நகரளவு எண்கள். 926 பாகத்திற்கு வடபுறமும் நகரளவு எண். 927 மற்றும் 971 இல் உள்ள இடங்கள் திருவாளர்கள் ச.போத்திராஜ் மற்றும் நால்வருக்கு சொந்தமானதாகும்.

மேற்படி சந்தின் மேற்கு கடைசியில் மனுதாரர் இடத்தினுள் முடிவடையும் சௌடம்மன் கோயில் சந்தின் மேற்கு கடைசியில் 153 சதுர அடி பரப்பை மனுதாரர் எடுத்துக் கொண்டு அதற்குப் பதிலாக, அதே இடத்தில் மேற்படி சந்தின் வடபுறம் நகரளவு எண். 927 பாகத்தில் 162 ச.அடி நிலப்பரப்பை மாநகராட்சிக்கு பரிவர்த்தனை செய்து கொள்ள மனுதாரர் திரு. போத்திராஜ் மற்றும் நால்வர் கோரியுள்ளனர்.

சௌடம்மன் கோவில் சந்து, என். எச். சாலையில் தொடங்கி மேற்காக மனுதாரர் இடத்தினுள் எவ்வித தொடர்ச்சியுமின்றி முடிகிறது. மனுதாரர் கோரியபடி நில பரிவர்த்தனை செய்தால் தாம் கட்ட உள்ள கட்டிடத்தை நல்ல முறையில் வடிவமைக்க இயலும் என்பதால் இந்த நில பரிவர்த்தனை முன் மொழிவினை சமர்ப்பித்துள்ளார். பரிவர்த்தனை செய்யக் கோருமிடம் மனுதாரர் தவிர வேறு யாருக்கும் பயன்படாத வகையில் மிகவும் குறுகலான சந்தாக உள்ளது.

மாநகராட்சியின் நிலங்களை அரசுத் துறைகள் உட்பட தனியார் யாருக்கும் அரசின் முன் அனுமதியின்றி நில உரிமை மாற்றம் செய்யவோ, பரிவர்த்தனை செய்யவோ, குத்தகைக்கு வழங்குவதையும் அரசாணை எண். 730 ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள்.14.4.1976 ல் தடை செய்துள்ளது.

இப்பரிவர்த்தனைக்கு அனுமதிக்க வேண்டுமெனில் அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மனுதாரரின் கோரிக்கை மனு நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 70, நாள். 27.1.2009 ல் "மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 9622/2008 / எச் 1 (தெ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 8 நாள்: 22.06.2009</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 27.01.09 ம் தேதிய தீர்மானம் எண் 70 ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நில பரிவர்த்தனைக்கு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி--

---

## பொருள் எண் 9

திரு சி. சௌந்தரராஜ் என்பவர் நகரளவு வார்டு எண். 11 பிளாக் எண். 39, நகரளவு எண். 1366/5 பாகம், ராமகிருஷ்ணா ஹாஸ்பிடல் அருகில், ஆவராம்பாளையம் சாலையில் அமைந்துள்ள இடத்தில் புதிதாக இரண்டு பேஸ்மெண்ட் தளங்கள் வாகன நிறுத்தும் இடமாகவும், தரைதளம் Shopping center, முதல் தளம் முதல் ஏழாம் தளம் வரை அலுவலகக் கட்டிடம் கட்ட உத்தேசித்து மேற்படி மனையிடத்தை 30மீ உயரம் கொண்ட பல அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோரி கேட்டுள்ளார்.

மனையிடம் கோயம்புத்தூர் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டம் எண். 5 லும் பொது உபயோகப் பகுதியாகவும் உள்ளது. மனையிடத்தின் முன்புறம் 80'-0" அகல தார்சாலை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. உத்தேச கட்டிடத்தின் உயரம் 28.5மீ. வட்டாச்சியர் சான்று, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையின் சான்று காவல் துறையின் சான்று பெறப்படவேண்டும். நகரளவையர் சான்று பெறப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து தளத்திலும் பொதுக் குளிர் சாதன வசதி உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டிட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. மனையிடத்தின் பரப்பு 56 சென்ட் ஆகும். சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது.

வார்டு எண். 18 நகரளவு வார்டு எண். 11 பிளாக் எண் . 39 நகரளவு எண். 1366/5 பாகம் ஆவராம்பாளையம் சாலையில் அமைந்துள்ள இடத்தை 30 மீ உயரம் வரை பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதி வழங்கலாம். ந.க.எண். 13857 / 08 /எச் 2 (வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 9 நாள்: 22.06.2009</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – அகில இந்திய மேயர்கள் மன்றம் - ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை - செயலாளர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி அவர்களின் கடித எண் 3387/AICM நாள் 14.3.09

-------------

கோயம்புத்தூர் மாநகர மன்றத்தின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், அகில இந்திய மேயர்கள் மன்றம், புதுடெல்லியில் அங்கத்தினராக இருந்து வருகிறார்.

**இதற்கு 2009-10 ம் நிதியாண்டிற்கான ஆண்டு சந்தாவாக ரூ. 10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) செலுத்துமாறு பார்வையிற் காணும் கடிதத்தில் இதன் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.**

**எனவே, இம்மாநகர மன்றத்தின் சார்பாக 2009-10 ம் நிதியாண்டின் ஆண்டு சந்தாவாக ரூ. 10,000/-ஐ தலைவர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி என்ற பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 3108/09/ எம்.சி. 8**

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 10 நாள்: 22.06.2009**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 11

**மனுதாரர் தி/வ பி.எஸ்.ஆர். சில்க் சாரீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், கதவு எண்- 942, கிராஸ்கட் சாலை, கோயமுத்தூர் - 12 அவர்கள் கோவை மாநகராட்சி நகரளவு வார்டு எண்: 11 பிளாக் எண்:12 நகரளவு எண் - 238/1,2, 237/1,2, 100'.0" சாலையில் அமைந்துள்ள 1971.18 ச.மீ. மனையிடத்தினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யுமாறு கோரியுள்ளார்.**

**மேற்படி மனையிடம் மாநகராட்சி வார்டு எண்: 33 ல் காந்திபுரம் 100 அடி சாலையில் அமைந்துள்ளது. மனையிடம் நகரளவு வார்டு எண்: 11 பிளாக் எண் : 12 நகரளவு எண் - 238/1,2, 237/1, மற்றும் 2-ல் 100'.0" சாலையில் அமைந்துள்ளது. மனையிடத்தில் ஏற்கனவே உள்ள பகுதிகளை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக பேஸ்மெண்ட் தளம் I, பேஸ்மெண்ட் தளம் II இரண்டு தளங்களிலும் வாகன நிறுத்துமிடமாகவும், தரை தளம், முதல் தளம், மற்றும் ஐந்து தளங்களில் வணிக கட்டிடம் (டெக்ஸ்டைல் ஷோரும்) கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனையின் பரப்பளவு - 1971.18 ச.மீ. உத்தேச கட்டிடத்தின் உயரம் 26 மீட்டர் உயரம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேச கட்டிடம், கட்டிட விதிகளை நிறைவு செய்கிறது. மனையிடத்தின் முன்பு 100'00" அகலமுள்ள தார் சாலை மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. சொத்து வரி 2007-2008 II-ம் அரையாண்டு வரை செலுத்தப்பட்டுள்ளது.**

**மனுதாரரின் உத்தேச கட்டிடத்தின் உயரம் 15 மீட்டருக்கு அதிகமாக உள்ளதால் மனையிடத்தினை பலமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய வேண்டும்.**

**எனவே, மேற்படி மனையிடத்தினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய கோரும் மனுதாரின் கோரிக்கையினை மாநகர மன்றத்தின் ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்பு துறைக்கு அனுப்ப மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு - ஒப்புதல் செய்யலாம். ந.க.எண் : 16302/08/H2 (வ)**

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 11 நாள்: 22.06.2009**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மனையிடம் வார்டு எண் 32 ல் அமைந்துள்ளது எனப் பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 12

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2009 முதல் 31.03.2010 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ காவலாளிகளை உக்கடம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையங்களில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நிட்டிப்பு செய்தல் - தொடர்பாக.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் 7 டெக்ஸ்கோ காவலாளிகளை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ. 5582/-ம் அதற்கான சேவைக் கட்டணம் 12%, அதற்குரிய சேவை வரி கட்டணம் 12%, கல்வி வரி கட்டணம் 3% வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் 31.03.2009 உடன் முடிவடைகிறது.

இதனைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை 01.04.2009 முதல் 31.03.2010 முடிய மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கும் பொருட்டு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் காவலாளி ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு தினக்கூலி அடிப்படையில் மாத ஊதியம் ரூ. 7025/- (சேவைக் கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவை வரிக் கட்டணம் 12.36% உட்பட) 7 காவலாளிகளுக்கு மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு அவர்களது கடித எண். 6416/CBE / TEXCO நாள் 13.03.2009-ல் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இம்மாநகராட்சியில் 7 டெக்ஸ்கோ காவலாளிகள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தற்போது அவர்கள் கேட்டுக் கொண்டுள்ள கட்டண விகிதத்தில் 7 டெக்ஸ்கோ காவலாளிகளை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டடு 01.04.2009 முதல் 31.03.2010 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணிபுரிய ஆகும் செலவினம் ரூ. 5,90,100/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதி அளிக்கலாம். ந.க.எண். 3809/09/ சி 1 (தெ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 12 நாள்: 22.06.2009</u>

01.04.2009 முதல் 30.09.2009 வரை 6 மாத காலத்திற்கு மட்டும் இப்பணிக்கு ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரி 01.10.2009 முதல் இப்பணிக்கு காவலாளிகளை நியமனம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 1.04.2009 முதல் 31.03.2010 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல்-தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ. 5484/-ம் அதற்கான சேவைக் கட்டணம் 12% அதற்குரிய சேவை வரி கட்டணம் 12% கல்வி வரி கட்டணம் 3% வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் 31.03.2009 உடன் முடிவடைகிறது.

இதனைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை 01.04.2009 முதல் 31.03.2010 முடிய மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கும் பொருட்டு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு தினக்கூலி அடிப்படையில் மாத ஊதியம் ரூ. 8552/- (சேவைக் கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவை வரிக் கட்டணம் 12.36% உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு அவர்களது கடித எண். 6416/cbe /Texco நாள் 13.03.2009-ல் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இம்மாநகராட்சியில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தற்போது அவர்கள் கேட்டுக் கொண்டுள்ள கட்டண விகிதத்தில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டடு 01.04.2009 முதல் 31.03.2010 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணிபுரிய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 25,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 3497/07/(எம்சி5) எம்சி 7

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 13 நாள்: 22.06.2009</u>

01.04.2009 முதல் 30.09.2009 வரை 6 மாத காலத்திற்கு மட்டும் இப்பணிக்கு ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரி 01.10.2009 முதல் ஓட்டுநர்களை நியமனம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

பொருள்- மனுதாரர் இணை நிர்வாக இயக்குநர் பவுண்டேசன் ஒன் இன்பராஸ்ட்ரெக்சர் பி லிட் மாநகராட்சிக்கு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் டி.எஸ் எண். 358, 359 டி.எஸ். வார்டு. எச். 8, டி.எஸ். பிளாக். 10, ஆர். எஸ்.புரம் பகுதியில் 1505 சதுர மீட்டர் பரப்பளவுள்ள தமக்கு சொந்தமான நிலத்தினை பலமாடி கட்டிட பகுதியாக பிரகடனப் படுத்தக் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மேற்காண் இடம் நகரமைப்பு திட்ட எண். 4 குடியிருப்பு பகுதியில் அமைகிறது.

<u>மனுதாரரின் உத்தேசம் விவரம்</u>.

மனையிட பரப்பளவு - 1505 ச.மீ
அணுகு சாலை அகலம் - 60 அடி
மனையின் அகலம் - 27.4 மீ
மனையின் நீளம் - 54.9 மீ

மனுதாரர் கீழ்கண்ட ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்

1. மனை ஒருங்கிணைப்பு வரைபடம்
2. சுற்றுச் சார்பு வரைபடம்
3. பத்திர நகல்
4. நகரளவு வரைபடம்
5. சொத்துவரி இரசீது நகல்
6. மின் கட்டண அட்டை நகல்
7. வில்லங்க சான்றிதழ்
8. கட்டிட உறுதி சான்றிதழ்
9. திட்ட வரைபட நகல்
10. மனுதாரரின் உறுதிமொழிப் பத்திரம்

மனுதாரர் மேற்கண்ட ஆவணங்களுடன் இரு மனைகளை ஒருங்கிணைப்பு செய்து ஸ்டில்ட் தளம், தரைதளத்துடன் எட்டு தளங்களுடன் 19 குடியிருப்புகள் கொண்ட பலமாடி குடியிருப்பு கட்டிட உத்தேசம் செய்து விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் விண்ணப்பத்துடன்

1. கட்டிட உரிம கட்டணம் ரூ. 82,940 /-
2. சேவை கட்டணம் ரூ. 5,950 /-
3. தொழிலாளர் சேமநல கட்டணம் ரூ. 55,100/- ஆகியவற்றை செலுத்தியுள்ளார்.
   உத்தேச குடியிருப்புகளின் எண்ணிக்கை – 19 மொத்தம்.

மனையிட பரப்பளவு - 1505.00 ச.மீ

உத்தேச ஸ்டில்ட் தளம் - 448.51 ச.மீ

உத்தேச தரைத் தளம் - 427.31 ச.மீ

உத்தேச முதல் தளம் - 427.31 ச.மீ

உத்தேச இரண்டாம் தளம் - 427.31 ச.மீ

உத்தேச மூன்றாம் தளம் - 427.31 ச.மீ

உத்தேச நான்காம் தளம் - 427.31 ச.மீ

உத்தேச ஐந்தாம் தளம் - 404.65 ச.மீ

உத்தேச ஆறாம் தளம் - 404.65 ச.மீ

உத்தேச ஏழாம் தளம் - 404.65 ச.மீ

உத்தேச எட்டாம் தளம் - 404.65 ச.மீ

டெரஸ் தளம் - 61.62 ச.மீ

காலியிடப்பரப்பு - 1056.49 ச.மீ

மனுதாரரின் உத்தேச கட்டிடத்திற்கு குடிநீா் விநியோகம் அணுகுசாலையின் முன்புறம் உள்ள பிரதான குடிநீா் விநியோக குழாயிலிருந்து விநியோகம் செய்ய வசதி உள்ளது. மனுதாரரின் உத்தேச கட்டிடத்திற்கு கழிவு நீா் வெளியேற்றுவதற்கு பிரதான பாதாள சாக்கடை குழாய் அமைப்பு மனுதாரரின் மனையிடத்தின் முன்புறம் அமையப் பெற்றுள்ளது. நாளது வரை மனுதாரா் சொத்திற்கு நிலுவையின்றி வரி செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரரின் உத்தேச கட்டுமானத்தை சுற்றிலும் திறவிடங்கள் கீழ்க்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. முன்புறத் திறவிடம் - 7.2 மீ

2. பின்புறத் திறவிடம் - 7.21 மற்றும் 9.92 மீ

3. பக்கத் திறவிடம் - மேற்கு - 7.21 மீ

வாகன நிறுத்துமிடம் - 429.93 ச.மீ உத்தேசிக்கப்பட்டுள்ளது.
P.C = 29.8 %
தரை பரப்பு விகிதம் - 2.495

அணுகு சாலை அகலம் - 60 அடி

மேற்காண் விபரங்கள் அடங்கிய மனுதாரரின் மனையினை பலமாடிக் கட்டிட பகுதியாக அறிவிப்பு செய்ய நகா் ஊரமைப்பு ஆணையா் சென்னை அவா்களுக்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> ஒப்புதல் செய்யலாம். ந.க. எண். 11214 / 08 / எச்.1 (மே)

<u>மாநகர மன்ற தீா்மானம் எண்: 14 நாள்: 22.06.2009</u>

அலுவலக குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலம் - வாா்டு எண். 25, கோயம்புத்தூா் வடக்கு வட்டம், புலியகுளம் கிராமம், நகர புல எண்கள் 1323/1, 1322/4, 1324/40, 1322/3, 1322/1, 1322/2, 5pt, 1321/1, 1324/39, மற்றும் 1324/41 ஆகிய காலைகளில் மொத்த விஸ்தீரணமான 73 1/2, சென்ட் (32163.45 சதுரடி) பரப்பளவு கொண்ட இடத்தினை, பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றுவதற்கு, திருவாளா் அக்ஷயா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினா் விண்ணப்பம் செய்துள்ளனா்.

உத்தேச பலமாடி கட்டிட உபயோக மாற்றம் கோரும் மனைக்கு வடபுறம் திருச்சி சாலை எனும் தேசிய நெடுஞ்சாலையும், தென்புறம் 40’-0” அகல மாநகராட்சி தாா்சாலையும் உள்ளது. மேற்படி இடத்தில் உள்ள பழைய கட்டிடம் அப்புறப்படுத்தப்பட்டு தற்போது காலியிடமாக உள்ளது.

1. மேற்படி இடத்தின் எல்லைகள் மற்றும் ஆவணங்கள் குறித்து, நகரளவைக் குறிப்பு பெறப்பட்டுள்ளது.

2. நெடுஞ்சாலைத் துறையின் தடையின்மைச் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

3. மயானம் அருகில் உள்ளதால் நகர்நல அலுவலரின், நிலத்தடி நீரை உபயோகப்படுத்தக்கூடாது எனும் நிபந்தனையின் பேரிலான, தடையின்மைச் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

4. தீயணைப்புத் துறையின், தடையின்மைச் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

5. 48 மீட்டர் உயரத்திற்கு கட்டிடம் கட்ட உள்ளதால் " Airport Authority of India ''-வின் தடையின்மைச் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

6. சொத்து வரி நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது.

7. மயானம் அருகில் மனை உள்ளதால் பொது சுகாதாரத் துறையினரால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

உத்தேச மனையிடம் கோயம்புத்தூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 30 –ல், குடியிருப்பு மற்றும் வணிக உபயோகப் பகுதியாக உள்ளது. உத்தேச குடியிருப்பு மற்றும் வணிக உபயோகம் கொண்ட பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய அடுக்குமாடி மற்றும் பொதுக் கட்டிட விதிகள், 1973 விதி 4 (2) ன்படி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க. எண். 4699 / 08 /எச்1 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 15 நாள்: 22.06.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தொழில் வரி உயர்வு செய்யப்பட்டது 01.10.2008 முதல் வசூல் செய்தல் - மாமன்ற ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக.

பார்வை - 1) அரசு ஆணை (எம்.எஸ் ) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1999
2) நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண். 38714/2008/ஆர் 1 நாள் 13.08.2008
3). மாமன்ற தீர்மானம் எண் 332 நாள் : 29.01.2009

-------------

பார்வை 3-ல் காணும் மாமன்ற தீர்மான எண். 332 நாள் 29.01.09-ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தொழில்வரி கீழ்க்கண்டவாறு 25% உயர்வு செய்து 01.04.2009 முதல் வசூலிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ. எண் | அரையாண்டு வருமானம் | தொழில் வரி (ரூபாய்) | |
|---|---|---|---|
| | | தற்போது உள்ளது | 25% உயர்வு |
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | 75/- | 94/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | 188/- | 235/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | 375/- | 469/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | 563/- | 704/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | 750/- | 938/- |

பார்வை 2- ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண். 38714/2008/ஆர் 1 நாள் 13.08.2008 ன்படி 01.10.08 முதல் தொழில் வரி உயர்வு செய்து வசூல் செய்யப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானம் எண். 332 நாள் 29.01.09-ல் தீர்மானித்துள்ளவாறு தொழில் வரி உயர்வு 25 சதவீதத்தை 01.10.08 முதல் வசூலிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 11325/08/எம்.ஏ. 1

மாநகர மன்ற தீர்மானம் எண்: 16 நாள்: 22.06.2009

ஏற்கனவே அனுமதித்தவாறு 1.4.2009 முதல் தொழில்வரி 25% உயர்வு செய்து வசூலிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் க.ச. எண். 395 / 1 - பாகம் விளாங்குறிச்சி கிராமம் என்.ஆர்.ஐ கார்டன் மனைப்பிரிவிற்கு அருகில் மாநகராட்சி வார்டு எண். 3 –ல் அமைந்துள்ள 1980.21 சதுர மீட்டர் பரப்பில் உள்ள இடத்தில் பல மாடிக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மனையிடத்தில் தரைத் தளத்தில் வாகனம் நிறுத்தும் இடமாகவும், முதல் தளத்தில் 4 குடியிருப்புகளும், INDOOR GAMES –ம், இரண்டாம் தளம் முதல் 7 –ம் தளம் வரை ஒவ்பொரு தளத்திலும் 6 குடியிருப்புகளும் மொத்தம் 40 குடியிருப்புகள் கொண்ட பல மாடிக் கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளார்.

கட்டிடத்தின் உயரம் 25.30 மீட்டர் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனையிடத்தின் முன்புறம் 60 அடி அகல திட்டச் சாலை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மனுதாரர் மனையிடத்தை பல மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய கேட்டுள்ளார். மனையிடம் விளாங்குறிச்சி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 8-லும் முழுமைத் திட்டத்தின்படி குடியிருப்பு பகுதியிலும் அமைந்துள்ளது.

எனவே க.ச எண். 395/1 பாகம் விளாங்குறிச்சி கிராமம் மனையிடத்தை பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 13013 / 08 / எச் 2 (வ)

மாநகர மன்ற தீர்மானம் எண்: 17 நாள்: 22.06.2009

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 18

மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்கள் தமது 4.10.2006 -ம் தேதிய கடிதத்தில் (கடித எண். ந.க. எண் 41708 / 06 / இ3) கோயம்புத்தூரில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலை நிறுவுவதற்காக, பல்வேறு தமிழ் இலக்கிய அமைப்புகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை அமைப்புக்குழு மாநகராட்சிக்குட்பட்ட 7 இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தை தேர்வு செய்து சிலை அமைக்க கோரியுள்ளதாகவும், இது குறித்து மாநகராட்சியின் விரிவான அறிக்கையினை அனுப்புமாறும் கோரியுள்ளதின் பேரில் மேற்படி தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலை சுங்கம் சந்திப்பு தென்புறமுள்ள முக்கோண வடிவிலான போக்குவரத்து தீவில் சிலை வைக்க ஆட்சேபணையில்லை என மாமன்ற தீர்மான எண். 217 நாள். 21.01.2008 –ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் திருச்சி சாலை நால்வழிப்பாதையாக அமைக்க உள்ளதாக நெடுஞ்சாலைத்துறை ஆட்சேபணையும், காவல்துறை ஆட்சேபணையும் பெறப்பட்டுள்ளதால், அதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள், சுங்கம் பகுதியைத் தவிர மாற்று இடத்தில் நிறுவ மாநகராட்சியின் கருத்துரு வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க வார்டு எண். 25-ல் பந்தய சாலை அரசு கலைக் கல்லூரி, நுழைவு வாயிலுக்கு எதிர்புறம் உள்ள பூங்காவில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலை அமைக்கலாம் எனவும், மேலும் அரசாணை (நிலை) எண். 221 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20.11.1998-ன்படி புதியதாக சிலை நிறுவுவதற்கு கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றப்பட வேண்டும்.

1. புதியதாக சிலை வைப்பதாக இருந்தால், அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்பட வேண்டும்.

2. சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநகராட்சியால் பராமரிக்க இயலாது.

3. சிலைகள் வெண்கலத்தால் நிறுவப்பட வேண்டும்.

மேலும், அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி இடத்தில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலை அமைக்க மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லை என்பதை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்க மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> அனுமதிக்கலாம். ந.க. எண் 2798 / 2007 / MH5.

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 18 நாள்: 22.06.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 19

கோயமுத்தூர் மாநாகராட்சியில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் கூட்டம், 25.02.2009-ம் தேதியில் நடை பெற்றதில் நகரமைப்பு குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களால் கோயமுத்தூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்கள் நலன் கருதி அமைக்கப்பட வேண்டிய திட்ட சாலைகள் குறித்த பொருள் மீது விவாதம் செய்யப்பட்டு கீழ் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(1) கோயமுத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு.எண்.42. பகுதியில், ராமகிருஷ்ணாபுரம். சாலை தொடர்ச்சி, 60 அடி சி.சி திட்ட சாலை அமைத்தல்.

(2) மேற்கு மண்டலம் வார்டு எண். 52, பகுதியில் ஏ.கே.எஸ் நகர் முதல் பொன்னைய ராஜபுரம் இணைப்பு சாலை அமைத்தல்.

(3) மேற்கு மண்டலம் வார்டு எண். 61 பகுதியில் தடாகம் சாலை முதல், வி.கே ரங்கநாதன் சாலை இணைப்பு சாலை அமைத்தல்.

(4) மேற்கு மண்டலம் என்.எஸ்.ஆர் சாலை முதல் கே.கே புதூர் வரை- இணைப்பு சாலை அமைத்தல்.

மேற்குறித்த திட்ட சாலைகள் அமைக்க சிறிய அளவில் நிலமெடுப்பு செய்ய வேண்டிய பகுதிகளுக்கு மாநகராட்சி நிதி ஆதாரங்கள் அடிப்படையிலும் மற்றும் பெரிய அளவிளான நிலமெடுப்புகள் செய்ய வேண்டிய இனங்களுக்கு கோயம்புத்தூர் திட்டக் குழுமம் மூலமும் நடவடிக்கை, மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது என நகரமைப்பு அபிவிருத்தி மற்றும் நிலை குழு தீர்மானம் எண். 72 நாள். 25.2.2009 ன் மூலம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளதினை மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க. எண். 5507/09 /எம்.எச் 5

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 19 நாள்: 22.06.2009**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்கண்ட திட்ட சாலைகள் அமைக்கும் பொருட்டு நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவின் 25.02.2009 ம் தேதிய தீர்மானம் எண் 72 ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

1. **ராமகிருஷ்ணாபுரம் சாலையில் துவங்கி, செல்வ சிந்தாமணி குளம் வழியாக பேரூர் சாலை வரையுள்ள 60' சி.சி. திட்ட சாலை.**
2. **மேற்கு மண்டலம் வார்டு எண். 52 பகுதியில் ஏ.கே.எஸ். நகர் முதல் பொன்னையராஜபுரம் இணைப்பு சாலை அமைத்தல்.**
3. **மேற்கு மண்டலம் வார்டு எண் 61 பகுதியில் தடாகம் சாலை முதல் வி.கே. ரங்கநாதன் சாலை இணைப்பு சாலை அமைத்தல்.**
4. **மேற்கு மண்டலம் என்.எஸ்.ஆர். சாலை முதல் கே.கே.புதூர் வரை இணைப்பு சாலை அமைத்தல்.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 20

**மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2009 - 2010 சட்டமன்ற பேரவையின் பட்ஜெட் கூட்டத்தில் பகுதி - II திட்டத்தின் கீழ் ரூ 175.00 இலட்சம் மதிப்பீட்டில் கோவை மாநகரில் சர்வதேச அளவிலான நீச்சல் குளம் கட்டப்படும் என அறிவித்துள்ளதாகத் தெரிவித்து, அதற்குரிய இடத்தை வழங்குவதற்கு மாநகராட்சியின் சம்மதத்தை தெரிவிக்குமாறு தமிழ்நாடு விளையாட்டு அபிவிருத்தி ஆணையத்தின் உறுப்பினர் செயலர் தனது 14.3.2009 ஆம் நாளைய கடித்தில் கேட்டுள்ளார்.**

**டாக்டர் நஞ்சப்பா சாலை, பார்க் கேட் பக்கமுள்ள கோ ஆப் டெக்ஸ் பொருட்காட்சித் திடல், மாநகரின் மையப்பகுதியில் பேருந்து நிலையம், இரயில்வே நிலையம், நேரு ஸ்டேடியம் போன்றவைகளுக்கு அருகாமையில் உள்ளதாலும், விளையாட்டு வீரர்கள் சுலபமாக வந்து செல்லும் பகுதியில் உள்ளதாலும், சர்வதேச அளவிலான நீச்சல் குளம் சென்னையை அடுத்து கோவையில் கட்டவிருப்பது கோவை மண்டலத்தில் உள்ள இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்பதாலும், மாநகராட்சி வார்டு எண். 27, சர்வே வார்டு எண். 1, பிளாக் எண். 13, நகரளவு எண். 924 -ல் 1.36 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள மேற்படி இடத்தில் சர்வதேச அளவிலான நீச்சல் குளம் கட்ட அனுமதி கோரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் - செயலர் அவர்களின் கடிதம், நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டதில் நகரமைப்புகுழு தனது தீர்மானம் எண். 74 நாள். 1.6.2009 ன் மூலம் இட உரிமை மாநகராட்சி வசம் மட்டுமே இருக்க வேண்டும். வணிக உபயோக கட்டிடங்கள் ஏதும் விளையாட்டு ஆணையத்தால் கட்டக்கூடாது. நீச்சல் குளம் பராமரிப்பு பற்றிய குழுவில் மாநகராட்சியின் பிரதிநிதித்துவம் சம அளவில் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனைகளுக்கு உட்பட்டு குத்தகை அடிப்படையில் பொருளில் குறிப்பிட்ட மாநகராட்சிக்கு சொந்தமான 1.36 ஏக்கர் நிலத்தை, உலக தரம் வாய்ந்த நீச்சல் குளம், கட்ட தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்திற்கு வழங்க அனுமதி கோரும் இப்பொருளை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண். 2992 / 09 / எம்.எச்5**

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 20 நாள்: 22.06.2009**

**அலுவலகக் குறிப்பு அனுதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 21

பொருள் : உரிம இனங்கள் - கோயமுத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலம் - 2009-2010 ம் ஆண்டிற்கான உரிம இனங்கள்- பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது- உயா்ந்தபட்ச கேள்விதாரா்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது - அனுமதி வேண்டுதல் - தொடா்பாக.

**********

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2009-2010ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிட்டுள்ள வருடாந்திர உரிம இனங்களின் வாயிலாக 01.04.2009 முதல் 31.03.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பெறப்படும் பலன்களை அனுபவித்துக் கொள்வதற்கு உரிமம் வழங்க பொது ஏலம் / மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் 23.02.2009, 02.03.2009 மற்றும் 28.04.2009 ஆகிய தேதிகளில் கோரப்பட்டது.

ஏல இனங்கள்

1. தியாகி குமரன் மாா்க்கெட்டில் தரைக்கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

2. ராமா் கோயில் வீதி மாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

3. போத்தனூா் ரோடு, லாரிப் பேட்டை மொத்த வியாபார மீன் மாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

4. போத்தனூா் ரோடு, லாரிப் பேட்டையில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

5. தியாகி குமரன் மாா்க்கெட் உட்புறம் உள்ள இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

6. உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

7. காந்திபுரம் நகரப்பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

8. காந்திபுரம் மத்தியப்பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

9. காந்திபுரம் மத்தியப்பேருந்து நிலையம் தரைத்தளம் மற்றும் 5வது தளம் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

10. காந்திபுரம் நகரப்பேருந்து நிலையத்தில் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (கடை உரிமைதாரா்களுக்கு வாகன நிறுத்த ஒதுக்கப்பட்ட பகுதி நீங்கலாக).

11. இராஜவீதி மருந்தகவளாகம் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

12. குரு ஹோட்டல் அருகில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

13. அவினாசி ரோடு பாஸ்போா்ட் அலுவலகம் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

14. வ.உ.சி.பூங்கா மிருகக்காட்சி சாலைக்கு நுழைவுக்கட்டணம் மற்றும் சிறுவா் விளையாடும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

15. ஆடு அறுவை மனை, உக்கடம்.

16. பொருள் காப்பகம், உக்கடம் பேருந்து நிலையம்

17. நவீனப் பொதுக்கழிப்பிடம் தியாகிகுமரன் மாா்க்கெட்.

18. நவீனப்பொதுக்கழிப்பிடம், லிங்கப்ப செட்டி வீதி.

19. நவீனப் பொதுக்கழிப்பிடம், உக்கடம் பேருந்து நிலையம்.

20. நவீனப் பொதுக்கழிப்பிடம், போத்தனூர் லாரிப்பேட்டை.

21. நவீனப் பொதுக்கழிப்பிடம் காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம். (ஆர்.வி.ஹோட்டல் அருகில்)

22. நவீனப் பொதுக்கழிப்பிடம், காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம். (தளம் 1, 2, 3, 4)

23. நவீனப் பொதுக் கழிப்பிடம், வ.உ.சி.பூங்கா வளாகம்.

24. நவீனப் பொதுக் கழிப்பிடம், உப்பிலிபாளையம் .

25. நவீனப் பொதுக் கழிப்பிடம், டவுன்ஹால் அருகில்.

26. நவீனப் பொதுக்கழிப்பிடம், செட்டிவீதி.

27. நவீனப் பொதுக்கழிப்பிடம், தர்மராஜா கோவில் வீதி.

28. நவீனப் பொதுக்கழிப்பிடம், காந்திபுரம் நகரப்பேருந்து நிலையம் பி3 காவல் நிலையம் அருகில்.

இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிப்புகள் வெளியானதால் ஏலம் மற்றும் குத்தகை இனங்கள் மாமன்றத்தின் அனுமதி பெற்று இறுதி செய்ய இயலாமல் போனதை தொடர்ந்து இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 11367/09/ஆர்-3 நாள் 30.03.2009 அவர்களது தெளிவுரைப்படி 2008-2009ம் ஆண்டு குத்தகை இனங்களை நடத்திவரும் ஏலதாரர்களுக்கு மேலும் ஒரு மாதம் தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மேற்காண் ஏலம் மற்றும் குத்தகை இனங்களின் உரிமைதாரர்களுக்கு அவர்களது இசைவுக் கடிதம் பெற்று ஒரு மாதம் நீட்டித்து 30.04.09 வரை உரிமையாணை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 11367/09/ஆர்-3 நாள் 16.04.2009ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி மாநகராட்சிப் பகுதிகளில் ஏலம் மற்றும் குத்தகை இனங்களில் முடிவு செய்யப்படாமல் உள்ள இனங்களை முடிவு செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோருவதற்கும் மாநகராட்சி அளவில் குழு அமைத்து முடிவு செய்திட அதிகாரம் வழங்கப்பட்டு இருந்தது. அதன்படி ஒருமாத காலம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்து தேர்தல் ஆணையத்தின் தெளிவுரையின்படி 2009-10க்கான உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தொகை வசூல் செய்யப்பட்டு குத்தகை உரிமம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

மேற்காண் இனங்களில் வரிசை எண். 3, 7, 9, 11, 12, 14, 20 மற்றும் 27 ஆகிய குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட அதிகமாக உள்ளது.

வரிசை எண். 1, 2, 4, 5, 8, 16, 17, 19, 22, 23 மற்றும் 28 ஆகிய குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டு ஏலத்தொகையை விட குறைவாகவும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட அதிகமாகவும் உள்ளது.

வரிசை எண். 6, 15, 18, 21, 24, 25 மற்றும் 26 ஆகிய குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகை சென்ற ஆண்டு ஏலத்தொகையை விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட குறைவாகவும் உள்ளது.

எனவே தேர்தல் விதிமுறையின்படி இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 11367/09/ஆர்-3 நாள் 30.03.2009 தெளிவுரைப்படி 2008-09ம் ஆண்டிற்கான முந்தைய குத்தகைதாரர்களுக்கு உரிம நீட்டிப்பு செய்யப்பட்டதற்கும், இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 11367/09/ஆர்-3 நாள் 16.04.2009ல் தெளிவுரைப்படி அமைக்கப்பட்ட மாநகராட்சி ஏலம் மற்றும் குத்தகை இனங்கள் உறுதி செய்யும் குழுவின் அனுமதியின்படியும் 2009-10ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். ந..க. எண். 9431 / 08 / அ.5

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 21 நாள்: 22.06.2009**

**பொருளில் ஏல இனங்கள் வரிசை எண். 15, ஆடு அறுவை மனை உக்கடம் ஏல இனத்திற்கு 30.09.2009 வரை மட்டும் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது. பிற ஏல இனங்களுக்கு அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**வரிசை எண் 15, 41 வது வார்டில் செயல்பட்டு வரும் ஆடு அறுவை மனையினை 54 வது வார்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஆடு அறுவை மனை கட்டிடத்திற்கு உடனடியாக மாற்றப்பட வேண்டும் என தெரிவித்து இவ்வினத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது என 41 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆட்சேபனை தெரிவித்தார். ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 22

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சி வணிகவளாக கடைகளில் தற்போது காலியாக உள்ள பட்டேல் ரோடு வணிக வளாகத்தில் கடை எண். 26, 29, 30 ஆகிய மூன்று கடைகளுக்கு 27.02.2009ல் நடைபெற்ற குறுகிய கால மறுபொது ஏலம் மறுஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டதில் உச்ச கேள்விகளுக்கு ஒப்புதல் வழங்குவது - தொடர்பாக.**

-----------------

**கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சி வணிகவளாக கடைகளில் தற்போது காலியாக உள்ள பட்டேல் ரோடு வணிக வளாகத்தில் கடை எண். 26, 29, 30 ஆகிய மூன்று கடைகளுக்கு குறுகிய கால மறுபொது ஏலம் 27.02.2009 அன்று நடைபெற்றது. தற்போது காலியாக உள்ள பட்டேல் ரோடு வணிக வளாகத்தில் கடை எண். 26, 29,30 ஆகிய மூன்று கடைகளுக்கு மட்டும் ஏலம் கோரி உச்ச கேள்வி கேட்கப்பட்டது. ஏலத்தில் கலந்துகொண்டு ஏலம் கோரிய விபரம் கீழே வருமாறு-**

| அமைவிடம் மற்றும் கடை எண். | ஏலதாரர் பெயர் | ஏலத்தில் கேட்கப்பட்ட உச்ச கேள்வி | ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய தொகை |
|---|---|---|---|
| பட்டேல் ரோடு வணிக வளாக கடை எண் 26 | 1. எஸ். சந்திரமோகன் | ரூ. 2,750/- | - - |
| | 2. வீ. சங்கரன் | ரூ. 2,700/- | - - |
| பட்டேல் ரோடு வணிக வளாக கடை எண் 29 | 1. டாக்டர் உ. சதீஷ் அரோபிந்தோ | ரூ. 2,750/- | - - |
| | 2. டாக்டர் என். உண்ணி கிருஷ்ணன் | ரூ. 2,800/- | - - |
| பட்டேல் ரோடு வணிக வளாக கடை எண் 30 | 1. டாக்டர் உ. சதீஷ் அரோபிந்தோ | ரூ. 2,800/- | - - |
| | 2. டாக்டர் என். உண்ணி கிருஷ்ணன் | ரூ. 2,750/- | - - |

**கடை எண். 26க்கு திரு எஸ். சந்திரமோகன் இந்த ஏலத்தில் உச்ச கேள்வியாக ரூ. 2,750/- கேட்டார். கடை எண். 29க்கு திரு டாக்டர் என். உண்ணி கிருஷ்ணன் இந்த ஏலத்தில் உச்ச கேள்வியாக ரூ. 2,800/- கேட்டார். கடை எண் 30க்கு டாக்டர் உ. சதீஷ் அரோபிந்தோ ஏலத்தில் உச்ச கேள்வியாக ரூ. 2,800/- கேட்டார்.**

**அவர்களின் உச்ச கேள்விகளை ஏற்று கடையை ஒதுக்கீடு செய்யலாம். மேலும் மற்ற காலி கடைகளுக்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லையாதலால் உச்ச கேள்வி ஏற்று கடை எண் 26, 29 மற்றும் 30 அங்கீகரிக்க 17.04.2009 நாளில் ஆணையாளர் அவர்களின் முன்ஏற்பு பெற்று மேற்கண்ட கடைகள் ஒப்படைக்கப்பட்டன.**

இதுசம்பந்தமாக பின்ஏற்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 11502/2008/அ4 (வ)

மாநகர மன்ற தீர்மானம் எண்: 22 நாள்: 22.06.2009

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 23

பொருள் - குத்தகை – கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 2009-2010 ம் ஆண்டு குத்தகை இனங்களுக்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகளில் கோரப்பட்ட உச்ச கேள்விகளுக்கு ஒப்புதல் வழங்குவது - தொடர்பாக.

--------------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் 2009-10 ம் ஆண்டுக்கான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு ஆணையாளர் அவர்களின் உத்தரவுப்படி, 24-02-2009, 02-03-2009 மற்றும் 28-04-2009 ஆகிய தேதிகளில் பொதுஏலம் மற்றும் மறுஏலம் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலதாரர்களால் கேட்கப்பட்ட உச்ச கேள்விகள் வருமாறு-

| இனம் எண் | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ. | மூன்றாண்டு சராசரித் தொகை ரூ. | தற்போது கேட்கப்பட்ட உச்ச கேள்வி ரூ. | உச்ச கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 2 | நவீன கட்டண கழிப்பிடம் சத்தி ரோடு | 2,42,000 | 2,00,192 | 3,53,000 | P.V. சுப்பிரமணி |
| 3 | நவீன கட்டண கழிப்பிடம் சீனிவாசபுரம் | 3,55,000 | 3,61,782 | 3,62,000 | V.K. ரஹமத்துல்லா |
| 4 | புல்மார்கெட் சத்தி ரோடு கட்டணம் | 1,40,500 | 1,45,167 | 1,46,500 | M. ராஜன் |
| 6 | சத்தி ரோடு ஆம்னி பேருந்து நுழைவு கட்டணம் | 4,80,855 (8 மாதம்) | - - | 8,91,000 | A.M. நாசர் அலி |

2009-2010 ம் ஆண்டு குத்தகை இனங்களுக்கான உச்ச கேள்விகளை அங்கீகரிக்க 17.04.2009 மற்றும் 28.04.2009 நாளில் ஆணையாளரின் அவர்களின் முன் ஏற்பு பெற்று மேற்கண்ட இனங்கள் ஒப்படைக்கப்பட்டன.

இது சம்பந்தமாக பின்ஏற்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 15012/2008/ அ 4 (வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 23    நாள்: 22.06.2009**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என  தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண்  24

பொருள் உரிம இனங்கள் - கோயமுத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் - 2009-2010ம் ஆண்டிற்கான உரிம இனங்கள் - பொது ஏலம், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது - அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

---------------

கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2009-2010ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிட்டுள்ள வருடாந்திர உரிம இனங்களின் வாயிலாக 01.04.2009 முதல் 31.03.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பெறப்படும் பலன்களை அனுபவித்துக் கொள்வதற்கு உரிமம் வழங்க பொது ஏலம், மறு ஏலம், ஒப்பந்தப்புள்ளிகள் 16.02.2009, 25.02.2009 28.04.2009 மற்றும் 19.05.2009 ஆகிய தேதிகளில் கோரப்பட்டது.

ஏல இனங்கள்

1. சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட்டில் கட்டணம்  வசூல் செய்யும் உரிமம்.
2. சிங்காநல்லூர் ஆடு அறுவை மனை  (8 கடைகளுடன் கூடியது ) கட்டணம் வசூல் செய்யும்  உரிமம்.
3. உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
4. சௌரிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
5. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
6. இராமநாதபுரம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
7. புலியகுளம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் -  கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
8. பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
9. ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
10. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
11. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
12. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைபேசி பூத் மூன்று எண்ணிக்கை அமைத்து நடத்திக் கொள்ளும் உரிமம்  (மூன்றாண்டுகளுக்கு).

இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிப்புகள் வெளியானதால் ஏலம் மற்றும் குத்தகை இனங்கள் மாமன்றத்தின் அனுமதி பெற்று இறுதி செய்ய இயலாமல் போனதை தொடர்ந்து இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.11367/09/ஆர்-3 நாள் 30.03.2009 அவர்களது தெளிவுரைப்படி 2008-2009ம் ஆண்டு குத்தகை இனங்களை நடத்திவரும் ஏலதாரர்களுக்கு மேலும் ஒரு மாதம் கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மேற்காண் ஏலம் மற்றும் குத்தகை இனங்களின் உரிமைதாரர்களுக்கு அவர்களது இசைவுக் கடிதம் பெற்று ஒரு மாதம் நீட்டித்து 30.04.09 வரை உரிமையாணை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.11367/09/ஆர்-3 நாள் 16.04.2009ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி மாநகராட்சிப் பகுதிகளில் ஏலம் மற்றும் குத்தகை இனங்களில் முடிவு செய்யப்படாமல் உள்ள இனங்களை முடிவு செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோருவதற்கும் மாநகராட்சி அளவில் குழு அமைத்து முடிவு செய்திட அதிகாரம் வழங்கப்பட்டு இருந்தது.

அதன்படி ஒருமாத காலம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்து தேர்தல் ஆணையத்தின் தெளிவுரையின்படி 2009-10க்கான உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தொகை வசூல் செய்யப்பட்டு குத்தகை உரிமம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

மேற்காண் இனங்களில் வரிசை எண். 2, 3, 4, 5, 10, 11 மற்றும் 12 ஆகிய குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட அதிகமாக உள்ளது.

வரிசை எண். 1, 6 மற்றும் 9 ஆகிய குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டு ஏலத்தொகையை விட குறைவாகவும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட அதிகமாகவும் உள்ளது.

வரிசை எண். 8ல் காண் குத்தகை இனத்திற்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகை சென்ற ஆண்டு ஏலத்தொகையை விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட குறைவாகவும் உள்ளது.

வரிசை எண். 7ல் காண் குத்தகை இனத்திற்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகை சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட குறைவாக உள்ளது. இவ்வினத்தினை பொறுத்தவரை நான்கு முறை ஏலத்தில் கொண்டு வந்தும் இத்தொகைக்கு மேல் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. மேலும் துறைமுலம் 01.05.2009 முதல் 18.05.2009 முடிய வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.17,089 ஆகும்.

இவ்வினத்திற்கு இரண்டு துப்புரவுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டால் மாதமொன்றுக்கு சராசரியாக ரூ.13,000 வீதம் ஓராண்டிற்கு ரூ.1,56,000 ஊதியமாக மட்டும் வழங்கப்பட வேண்டியுள்ளது. மேலும் இப்பகுதியில் இலவச சிறுநீர் கழிப்பிடம் (ISP Toilet) கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே இத்தொகைக்கு மேல் ஏலம் கோர ஒருவரும் முன்வராத காரணத்தினாலும் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி உயர்ந்தபட்ச கேள்வித்தொகையினை ஏற்று ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

எனவே தேர்தல் விதிமுறையின்படி இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண். 11367/09/ஆர்-3 நாள் 30.03.2009 தெளிவுரைப்படி 2008-09ம் ஆண்டிற்கான முந்தைய குத்தகைதாரர்களுக்கு உரிம நீட்டிப்பு செய்யப்பட்டதற்கும், இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.11367/09/ஆர்-3 நாள் 16.04.2009ல் தெளிவுரைப்படி அமைக்கப்பட்ட மாநகராட்சி ஏலம் மற்றும் குத்தகை இனங்கள் உறுதி செய்யும் குழுவின் அனுமதியின்படியும் 2009-10ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 16117 / 08 / கி.அ.7

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்:24 நாள்: 22.06.2009</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 25

பொருள் - குத்தகை இனங்கள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - 2009-2010-ம் ஆண்டுக்கு 01.04.09 முதல் 31.03.2010 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் வழங்கியது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

--------------------------

குத்தகை இனங்கள் விபரம்

1) பன்னீா செல்வம் பூ மாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (28 நிரந்தரக் கடைகள், 144 மேடைக்கடைகள் நீங்கலாக.)

2) மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.

3) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.

4) ஆா்.எஸ்.புரம் மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி அருகிலுள்ள வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

5) பன்னீா செல்வம் பூ மாா்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

6) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மாா்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

7) மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மாா்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

8) தடாகம் ரோடுநவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

9) காந்திபாா்க் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

10) காந்திபாா்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

11) மேட்டுப்பாளையம் ரோடு எடை மேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

12) திவான் பகதூா் ரோடு மாநகராட்சி பள்ளி வளாக மைதானத்தில் வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமை.

நகராட்சி நிா்வாக இயக்குநா் அவா்களது ந.க. எண்.11367/09/ ஆா்-3 நாள் 30.03.09-ம் தேதிய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு நாடாளுமன்ற மக்களவை தொகுதி பொது தோ்தல் 2009 அறிவிக்கப்பட்டு நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்ததினால் 2008-09-ம் ஆண்டின் ஏற்கனவே குத்தகை அனுபவித்து வரும் குத்தகைதாரருக்கே மேற்காணும் குத்தகை இனங்களில் வரிசை எண்கள். 1,2,5,6,7,8,9 மற்றும் 10 ஆகியவை 01.04.09 முதல் 20.04.09 வரை 2008-2009-ம் ஆண்டின் ஏலத் தொகையின் அடிப்படையில் ஒப்படைப்பு செய்யப்பட்டது. இதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

மேலும் வரிசை எண்கள். 3 மற்றும் 4 இனத்திற்கு முந்தைய ஏலதாரா்கள் ஏலத் தொகை நடப்பு ஆண்டுக்கு செலுத்த முன் வராததால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டது. இதனை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

2009-2010-ம் ஆண்டுக்கு 12.02.09 மற்றும் 5.3.09-ம் தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. அதில் கீழ்காணுமாறு ஏலதாரா்கள் கலந்து கொண்டு உச்ச கேள்வி கேட்டுள்ளனா்.

வரிசை எண்.1-ல் கண்ட இனமான பன்னீா செல்வம் பூமாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. (28 நிரந்தரக் கடைகள், 144 மேடை கடைகள் நீங்கலாக) இவ்வினத்திற்கு திரு.A.M. நாசா் அலி என்பவா் உயா்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.20,00,700-க்கு கேட்டுள்ளாா். இத் தொகை 2008-2009-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.23,00,400-ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.15,58,800-ஐ விட கூடுதலாக உள்ளது.

**வரிசை எண்.2-ல் கண்ட இனமான மேட்டுப்பாளையம் ரோடு, தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை இவ்வினத்திற்கு திருமதி.S. ஜெயா என்பவர் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.32,84,612-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2008-2009-ம் ஆண்டின் ஏலத்தொகை ரூ. 28,50,060-ஐ விடவும், 3 ஆண்டு சராசரி தொகை ரூ.29,35,353-ஐ விடவும் அதிகமாக உள்ளது.**

**வரிசை எண்.3-ல் கண்ட இனமான மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு.K.A.அபுதாஹீர் என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.89,83,988-க்கு கேட்டுள்ளார். இத் தொகை 2008-2009-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.10,80,999-ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ..89,07,666-ஐ விட அதிகமாக உள்ளது.**

**வரிசை எண். 4-ல் கண்ட இனமான ஆர்.எஸ்.புரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகிலுள்ள வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு.M.செல்வம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.2,40,003-க்கு கேட்டுள்ளார். இத் தொகை 2008-2009-ம் ஆண்டின் ஏலத்தொகை ரூ.4,14,000-ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.2,26,000-ஐ விட அதிகமாக உள்ளது.**

**வரிசை எண்.5-ல் கண்ட இனமான பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு A.M. நாசர் அலி என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.6,75,000-க்கு கேட்டுள்ளார் இத்தொகை 2008-2009-ம் ஆண்டின்ஏலத் தொகை ரூ.7,33,333-ஐ விட அதிகமாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.6,06,778-ஐ விட கூடுதலாக உள்ளது.**

**வரிசை எண்.6-ல் கண்ட இனமான மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு.C.R.விநாயகம் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ.2,81,000-க்கு கேட்டுள்ளார். இத் தொகை 08-09-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.3,36,666-ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.2,55,222-ஐ விட கூடுதலாக உள்ளது.**

**வரிசை எண்.7-ல் கண்ட இனமான மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு.J. சுதாகர் என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.3,28,004-க்கு கேட்டுள்ளார். இத் தொகை 08-09-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.3,15,000-ஐ விட கூடுதலாகவும் 3 ஆண்டு சராசரி தொகை ரூ.2,84,000-ஐ விட அதிகமாகவும் உள்ளது.**

**வரிசை எண்.8-ல் கண்ட இனமான தடாகம் ரோடு நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு.C.R.விநாயகம் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ.4,03,000-க்கு கேட்டுள்ளார். இத் தொகை 08-09-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.4,56,666-ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ3,49,812-ஐ விட கூடுதலாக உள்ளது.**

**வரிசை எண். 9-ல் கண்ட இனமான காந்தி பார்க் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு.B.C. ராமசாமி என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ.2,14,000-க்கு கேட்டுள்ளார். இத் தொகை 08-09-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.2,36,666-ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.1,91,289-ஐ விட அதிகமாக உள்ளது.**

**வரிசை எண். 10-ல் கண்ட இனமான காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு திரு.K.செந்தில் என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5,01,000-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 08-09-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.5,10,000-ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.3,05,667-ஐ விட அதிகமாக இருந்ததினால் மேற்படியாரது ஒப்பந்தப்புள்ளி கேள்வியினை ஏற்று தொகை செலுத்த அறிவிப்பு ஏலதாரர்க்கு சார்வு செய்யப்பட்டது. ஏலதாரர் ஏலத் தொகையினை செலுத்த முன்வராததால் அன்னாரது பொறுப்பு தொகைகள் பறி முதல் செய்யப்பட்டது. பின்னர், இரண்டாவது உச்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.A.வெங்கடேஷ் என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.4,16,900-ஐ ஏற்று உரிமையாணை வழங்கப்பட்டது.**

வரிசை எண்.11-ல் கண்ட இனமான மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட்டில் உள்ள எடைமேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினம் உபயோகப்படுத்தப்படாத நிலையில் பழுதுபட்டு இருப்பதால் அதனை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பழுது சரி செய்த பின்னர் ஏலதாருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண் 12-ல் கண்ட இனமான ஆர்.எஸ். புரம் திவான் பகதூர் ரோடு மாநகராட்சி பள்ளி வளாக மைதானத்தில் வாகன நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் தொடர்பாக, 2008-2009-ம் ஆண்டின் ஏலதாரர் திரு.R.மூர்த்தி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் இடைக்கால உத்திரவு M.P.1/2009 மற்றும் W.P.No.2655/09 நாள் 11.02.09-ன்படி பெற்றதினால் நீதிமன்ற உத்திரவின்படி 31.03.09-ம் தேதிக்கு பிறகும் மேற்படியாருக்கு தொடர்ந்து வாகன கட்டணம் வசூல் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. பின்னர் சென்னை உயர்நீதிமன்ற உத்திரவு M.P.1 & 2/2009 மற்றும் W.P.No.2655/09 நாள் 30.04.09-ம் தேதிய உத்திரவின்படி திரு.R.மூர்த்தி என்பவரது மனு பரிசீலிக்கப்பட்டு கோரிக்கை நிராகரிக்கப்பட்டு குத்தகை பறிமுதல் செய்யப்பட்டது.

தற்போது 2009-10-ம் ஆண்டுக்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி திரு.P.V.சுப்பிரமணியன் என்பவர் ரூ.13,00,005-க்கு கேட்டுள்ளார். இத் தொகை 2008-09-ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.22,57,599- ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.11,25,916-ஐ விட அதிகமாக உள்ளது.

எனவே நாடாளுமன்ற மக்களவை தொகுதி பொது தேர்தல் 2009 அறிவிக்கப்பட்டு நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்ததினால் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது சுற்றறிக்கை ந.க. எண்.11367/09/ஆர்-3 நாள் 16.04.09-ல் தெரிவித்துள்ளவாறு உச்ச கேள்வி கோரியுள்ள தொகையினை மாநகராட்சி குழு 17.04.09, 04.05.09 மற்றும் 15.05.09-ந் தேதியில் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி குத்தகை இனங்கள் ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனை ஏற்கவும் மற்றும் மேற்காணும் ஏலம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பேரிலும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண்.12496/08/அ1(மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 25 நாள்: 22.06.2009</u>

பொருளில் வரிசை எண். 5 குறித்த விளக்கத்தில் இத்தொகை 2008-2009ம் ஆண்டின் ஏலத் தொகை ரூ.7,33,333 ஐ விட குறைவாக உள்ளது. 3 ஆண்டு சராசரி தொகை ரூ.6,06,778 ஐ விட கூடுதலாக உள்ளது என பதிவு செய்யப்பட்டது. அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 26

பொருள் : மாநகராட்சி வணிக வளாகக் கடைகள்-கோயமுத்தூர் மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-31.03.2009 உடன் உரிமக்காலம் முடிவடைந்த கடைகள்-உரிமக் கட்டணம் உயர்வு செய்து –உரிமக் காலம் நீடித்து வழங்குவது-தொடர்பாக.

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்காண் வணிக வளாக கடைகளின் நீட்டிப்பு செய்யப்பட்ட உரிமக் காலம் 31.03.2009 உடன் முடிவடைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் | - | கடை எண்.1 முதல் 10 மற்றும் 12 முதல் 15 வரை |
| 2. புலியகுளம் மாநகராட்சி வணிகவளாகம் | - | கடை எண்.1 முதல் 2 மற்றும் 4 முதல் 8 வரை |
| 3. உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் | - | கடை எண்.1 முதல் 4 மற்றும் 6, 7 |
| 4. சிங்காநல்லூர் மாநகராட்சி வணிக வளாகம் | - | கடை எண்.1 முதல் 7 வரை |

மேற்காண் வணிக வளாக கடைகளின் உரிமதாரர்கள் மற்றும் அனுபோகதாரர்கள் மேற்காண் கடைகளின் உரிமக் காலம் நீட்டிப்பு செய்யக் கோரியும், மாநகராட்சியால் உயர்வு செய்யும் உரிமக் கட்டணத் தொகைக்கு சம்மதம் தெரிவித்தும் விண்ணப்பம் செய்துள்ளனர்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகைக்கு புதுப்பித்தல் குறித்து அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் திருத்திய நடைமுறைகள் ஆணைகள் வெளியிட்டுள்ளது. அதன்படி இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் அதிகபட்சமாக சதுரடிக்கு ரூ.14.58 வீதமும், புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் ரூ.10.94 வீதமும், உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் ரூ.6.36 வீதமும், சிங்காநல்லூர் மாநகராட்சி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் ரூ.16.74 வீதமும் வசூலிக்கப்பட்டு வருவதாக வெளியிடப் பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடை எண். 1 மற்றும் 2-ன் வாரிசுதாரரான திருமதி. கீதா தனது 16.02.2009-ம் தேதிய விண்ணப்பத்தில் தனது தந்தை திரு. எஸ். தங்கவேல் 19.08.1994-ல் காலமாகிவிட்டதால், அவரது வாரிசாகிய தான் தொடர்ந்து கடையை நடத்தி வருவதாகவும், கடையினை தனது பெயருக்கு மாற்றம் செய்து தருமாறும், அரசாணையின்படி கட்டணம் செலுத்த ஒப்புக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் பாரா எண்.4-ல், II-ல், நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்றாண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதின் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக 9 ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15 சதவீதம் உயர்த்தப்படும். (நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்)

பாரா எண்.4-ல், III-ல் ஒன்பது ஆண்டுகளுக்குப்பின்னர் குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். தற்போதைய குத்தகைதாரர்களுக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை விகிதத்தில், மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீடித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக்கொள்ளவில்லை ஆனால், அச்சொத்து ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும்.

பாரா எண்.4-ல், IV-ல் குத்தகைதாரர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க 100 - 500 சதுரடிக்கு ரூ.1000/- கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

பாரா எண். 4-ல்,VI -ல் முதல் குத்தகைதாரர்களின் வாரிசுதாரர்கள் அனைத்து பங்குத் தொகைகளையும் செலுத்துவதின் பேரிலும், நகர்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையை செலுத்த ஒப்புக் கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டும் அவர்களுடைய பெயரில் குத்தகை உரிமை மாற்றம் பெற உரிமையுடையவராவார். சட்டப்படியான வாரிசுதாரர்கள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயத்திற்கு உட்பட்டவராவார்கள். பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.500/-ஆக நிர்ணயிக்கப்படும் எனவும், அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் கடை எண்.1 முதல் 10 மற்றும் 12 முதல் 15 வரை புலியகுளம் மாநகராட்சி வணிகவளாகம் கடை எண்.1 முதல் 2 மற்றும் 4 முதல் 8 வரை, உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.1 முதல் 4 மற்றும் 6, 7 சிங்காநல்லூர் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.1 முதல் 7 வரை கடைகளின் உரிமதாரர்கள் உரிம நீட்டிப்புத் தொகை ரூ.1000 வீதம், செலுத்தி உரிம நீட்டிப்பு கோரியுள்ளார்கள்.

எனவே அரசாணையின்படி தற்போதைய உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சம் 15 சதவீதம் மற்றும் சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால், கீழ்குறிப்பிட்டுள்ளவாறு உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| கடை எண். | உரிமதாரர் பெயர் | உரிமம் புதுப்பிக்க செலுத்திய கட்டணம் | தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணம் | 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் உரிமக் கட்டணம் | சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| **இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் - 210 சதுரடி பரப்பளவு (சந்தை மதிப்பு சதுரடி ஒன்றுக்கு ரூ.14.58)** | | | | | |
| 1. | திரு. தங்கவேல் | 1000 | 3378 | 3885 | 3062 |
| 2. | திரு. தங்கவேல் | 1000 | 3030 | 3485 | 3062 |
| 3. | திருமதி. பி. ருக்குமணி | 1000 | 3240 | 3726 | 3062 |
| 4. | திரு. ரபீக்மூசா | 1000 | 3297 | 3792 | 3062 |
| 5. | திரு.ஆர். சின்னசாமி | 1000 | 3356 | 3860 | 3062 |
| 6. | டாக்டர் மோகனா ராமசந்திரன் | 1000 | 3297 | 3792 | 3062 |
| 7. | திரு. ராஜேந்திரன் | 1000 | 3471 | 3992 | 3062 |
| 8. | திரு. ராஜேந்திரன் | 1000 | 3471 | 3992 | 3062 |
| 9. | திருமதி. எம்.ஏ.கிருஷ்ணவேணி | 1000 | 4047 | 4654 | 3062 |
| 10. | திரு. கருப்பண்ணன் | 1000 | 3839 | 4415 | 3062 |
| 12. | திரு. கே. ராஜாராம் | 1000 | 3701 | 4256 | 3062 |
| 13. | திரு.பி. ராஜேந்திரன் | 1000 | 3480 | 4002 | 3062 |
| 14. | திரு. எ. பாக்கியசாமி | 1000 | 3471 | 3992 | 3062 |
| 15. | திரு. சி. செந்தில்குமார் | 1000 | 3471 | 3992 | 3062 |
| **புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம் (125 சதுரடி)** | | | | | |
| 1. | திரு. ஈ. சேதுவராஜ் | 1000 | 1295 | 1490 | 1368 |
| 2. | திரு.எம். செபாஸ்டியான் | 1000 | 1757 | 2021 | 1368 |
| 4. | திரு. திரவியராஜ் | 1000 | 1313 | 1510 | 1368 |
| 5. | திரு. பி. விஜயன் | 1000 | 1286 | 1479 | 1368 |
| 6. | திரு.கே. காலித் | 1000 | 1286 | 1479 | 1368 |
| 7. | திரு. ஆர். சண்முகம் | 1000 | 2798 | 3218 | 1368 |
| 8. | திரு.வி.ஆர். மணி | 1000 | 2728 | 3138 | 1368 |
| **உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் ( 260 சதுரடி)** | | | | | |
| 1. | திரு. ஆர். கிருஷ்ணசாமி | 1000 | 608 | 700 | 1654 |
| 2. | திருமதி. ராஜேஸ்வரி | 1000 | 680 | 782 | 1654 |
| 3. | திரு. எஸ். பழனிசாமி | 1000 | 624 | 718 | 1654 |
| 4. | திரு. சீதாராமன் | 1000 | 648 | 746 | 1654 |
| 6. | திரு. எஸ்.ஆர். பழனிசாமி | 1000 | 864 | 994 | 1654 |
| 7. | திரு. ஆர். காளியப்பன் | 1000 | 1056 | 1215 | 1654 |
| **சிங்காநல்லூர் மாநகராட்சி வணிக வளாகம் (200 சதுரடி)** | | | | | |
| 1. | திரு. பி. செளந்தர்ராஜன் | 1000 | 2800 | 3220 | 3348 |
| 2. | திருமதி. பாப்பம்மாள் | 1000 | 2800 | 3220 | 3348 |
| 3. | திரு. பி. வேலுச்சாமி | 1000 | 2800 | 3220 | 3348 |
| 4. | திரு. பழனியப்பன் | 1000 | 2800 | 3220 | 3348 |
| 5. | திரு. மருதாசலம் | 1000 | 2800 | 3220 | 3348 |
| 6. | திரு. நவநீத கிருஷ்ணன் | 1000 | 2800 | 3220 | 3348 |
| 7. | தலைவர், காந்திபுரம் சர்வோதயா சங்கம் | 1000 | 2800 | 3220 | 3348 |

**மேற்காண் வணிக வளாக கடைகளில் இராமநாதபுரம் வணிக வளாக கடை எண்.1 முதல் 10, 12 முதல் 15 ஆகிய கடைகளுக்கும், புலியகுளம் வணிக வளாக கடை எண்.1 முதல் 2, 4 முதல் 8 வரையிலான கடைகளுக்கும் மாதாந்திர உரிமக் கட்டணம் சந்தை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் உரிம கட்டணத் தொகையைவிட தற்போதைய உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சமாக 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால், பெறப்படும் உரிமக் கட்டணத் தொகை கூடுதலாக உள்ளதால், 15 சதவீதம் உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக் காலம் 01.04.2009 முதல் 31.03.2012 வரையிலான மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யலாம்.**

**உப்பிலிபாளையம் வணிக வளாகக் கடை எண்.1 முதல் 4, 6,7 மற்றும் சிங்காநல்லூர் வணிக வளாகக் கடை எண்.1 முதல் 7 ஆகிய கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்படும் உரிமக் கட்டணம் குறைந்த பட்சம் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் உரிமக் கட்டணத் தொகையினை விட சந்தை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் உரிமக் கட்டணத் தொகை கூடுதலாக வருவதனால், சந்தை மதிப்பு அடிப்படையில் உயர்வு செய்து உரிம காலம் 01.06.2009 முதல் 31.03.2012 வரையிலான மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யலாம்.**

மேலும் இராமநாதபுரம் வணிக வளாகக் கடை எண்.1, 2-ல் அரசாணையின்படி எண்.92 நாள் 03.07.2007-ல் பத்தி எண்.4 (VI)-ல் தெரிவிக்கப்பட்டுள்ள உரிமதாரரான திரு. தங்கவேல் காலமாகிவிட்டதனால், அவரது வாரிசுதாரரான திருமதி. கீதா என்பவா் பெயருக்கு மாற்றம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம். அதற்குண்டான பெயா் மாற்றக் கட்டணம் ரூ.500/-ஐ வசூல் செய்யலாம்.

அலுவலகக்குறிப்பு : அனுமதி வழங்கலாம். ந.க.எண். 2683 / 2009/ கிஎ 7

<u>மாநகர மன்ற தீா்மானம் எண்: 26 நாள்: 22.06.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 27

பொருள் : உரிமம் - கோயமுத்தூா் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்-புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம்- சா்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு மாதாந்திர உரிமக் கட்டணம் அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டது - உரிமக்காலம் 25.07.2009 உடன் முடிவடையவுள்ளது - உரிமக் கட்டணம் உயா்வு செய்து – உரிமக் காலம் நீடித்து வழங்குவது-தொடா்பாக.

-----------

கோயமுத்தூா் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.20,000/- அடிப்படையில் 26.07.2006 முதல் 25.07.2009 முடிய மூன்றாண்டுகளுக்கு சா்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு ஒப்படை செய்யப்பட்டதன் உரிமக் காலம் 25.07.2009 உடன் முடிவடைய உள்ளது.

சா்வே ஆப் இந்தியா அலுவலக இயக்குநா் தமது கடித எண்.187/(13ஏ) நாள் 27.02.2009-ன் மூலம் ஏல ஒப்பந்தத்தின்படி மேலும் மூன்றாண்டுகளுக்கு அலுவலகம் செயல்பட உரிமம் புதுப்பித்து வழங்குமாறு தெரிவித்துள்ளாா்.

நகா்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகைக்கு புதுப்பித்தல் குறித்து அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் திருத்திய நடைமுறைகள் ஆணைகள் வெளியிட்டுள்ளது. பாரா எண்.4-ல், II-ல், நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்றாண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதின் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக 9 ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15 சதவீதம் உயா்த்தப்படும். (நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரா்களுக்கும் பொருந்தும்) .

மேலும் பாரா எண்.4-ல், IV-ல் குத்தகைதாரா்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க 1000 சதுரடிக்கு மேல் ரூ. 2000 கட்டணம் செலுத்த வேண்டும்.

அதன்படி புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபத்தில் செயல்பட்டு வரும் சா்வே ஆப் இந்தியா அலுவலகம் மத்திய அரசு அலுவலகமாதலால், அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் தெரிவித்துள்ளபடி, தற்போது செலுத்தப்பட்டு வரும் மாதாந்திர உரிமக் கட்டணத் தொகை ரூ.20,000/- ஐ 15 சதவீதம் உயா்வு செய்து, மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.23,000/- ஆக நிா்ணயம் செய்து 26.07.2009 முதல் 25.07.2012 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு உரிம நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதி வழங்கலாம். ந.க.எண்.8146/ 2009/ கிஎ7

<u>மாநகர மன்ற தீா்மானம் எண்: 27 நாள்: 22.06.2009</u>

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 28

**பொருள் - மாமன்ற தீர்மானம் எண் 79 நாள் 23-07-07ன்படி திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் கட்டணம் மீண்டும் திருத்தி அமைத்தல் - குடிநீர் விநியோக துணை விதிகள் - மாமன்ற ஒப்புதல் கோருதல்.- தொடர்பாக.**

--------------

**இம்மாநகராட்சியில் குடிநீர் கட்டண விகிதங்கள் 01.04.2003 முதல் மாநகர மன்ற தீர்மானம் எண். 341 நாள் 31.01.2003ன்படி, திருத்தியமைக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டுவரும் பில்லூர் 2-வது தனி குடிநீர் திட்டப்பணி ரூ. 113.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது இத்திட்டப்பணியின் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 140.00 கோடியாக உயருமென மதிப்பிடப்படுகிறது.**

**இத்திட்டத்திற்கென நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 113.74 கோடியில் 70 சதவீத மானிய நிதிபோக மீதமுள்ள 30 விழுக்காடு மாநகராட்சி பங்குத்தொகை மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கும் கூடுதலான ஒப்பந்தத் தொகையுடன் சேர்த்து மாநகராட்சி ரூ.50.00 கோடிக்கும் மேலாக மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது.**

**இந்நிலையில் குடிநீர் கட்டணத்தினை உயர்த்த மாநகர மன்றம் தனது 23.7.07ம் தேதிய தீர்மானம் எண். 79 ல் கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்து குடிநீர் கட்டணம் வசூல் செய்ய ஒப்புதல் வழங்கியது.**

**<u>அட்டவணை- 1</u>**

**மாமன்றம் ஒப்புதல் அளித்துள்ள குடிநீர் கட்டண சீரமைப்பு விபரம்**

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு | | பொது நிறுவனங்கள் முதலியவற்றுக்கு மொத்த விநியோகம் 20 mm விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| அ | வீட்டு உபயோகம் | அ. இலவச விநியோகம் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் | | அ. இலவச விநியோகம் இல்லை | |
| | இருமாத உபயோக அளவு | ஆ. இலவச சலுகை நீங்கலாக அதிகப்படி விநியோகம் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| 1. | 50000 லிட்டர் வரை | ரூ. 3.50 | ரூ. 4.50 | ரூ. 3.50 | ரூ. 5.25 |
| 2. | 50001 – 100000 லிட்டர் வரை | ரூ. 4.00 | ரூ. 6.00 | ரூ. 4.00 | ரூ. 6.00 |
| 3. | 100001 – 150000 லிட்டர் வரை | ரூ. 5.00 | ரூ. 8.00 | ரூ. 5.00 | ரூ. 8.00 |
| 4. | 150000 லிட்டருக்கு மேல் | ரூ. 6.50 | ரூ. 10.00 | ரூ. 6.50 | ரூ. 11.00 |
| | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | | ரூ. 80.00 | ரூ. 120.00 | ரூ.600.00 | ரூ. 900.00 |

<u>வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு வழங்கப்படும் குடிநீர் கட்டண விபரம்</u>

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு | | பொது நிறுவனங்கள் முதலியவற்றுக்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| ஆ | வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு | அ. இலவச விநியோகம் இல்லை | | அ. இலவச விநியோகம் இல்லை | |
| | இருமாத உபயோக அளவு | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| 1. | 50000 லிட்டர் வரை | ரூ. 7.00 | ரூ. 10.50 | ரூ. 7.00 | ரூ. 10.50 |
| 2. | 50001 – 100000 லிட்டர் வரை | ரூ. 9.00 | ரூ. 13.50 | ரூ.9.00 | ரூ. 13.50 |
| 3. | 100001 – 150000 லிட்டர் வரை | ரூ.12.00 | ரூ. 18.00 | ரூ.12.00 | ரூ. 18.00 |
| 4. | 150000 லிட்டருக்கு மேல் | ரூ.15.00 | ரூ. 22.50 | ரூ.15.00 | ரூ. 22.50 |
| | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | | ரூ. 350.00 | ரூ.525.00 | ரூ. 900.00 | ரூ.1350.00 |
| | | | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ. 50.00 | ரூ. 50.00 |
| | குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.50.00 | ரூ. 50.00 |
| | | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.60.00 | ரூ. 60.00 |

மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிநீர் கட்டணத்தில் 10% உயர்த்தி வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

திருத்தி அமைக்கப்பட்ட கட்டண விகிதங்கள் மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் துணை விதிகள் குறித்து பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, மாநகர மன்ற தீர்மானம் எண். 264 நாள் 21.1.08ல் ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளை தள்ளுபடி செய்து, திருத்தி அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்ட குடிநீர் கட்டண உயர்வினை மாமன்றம் உறுதிசெய்து, குடிநீர் விநியோக துணை விதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்புதல் பெறவும், திருத்தி அமைக்கப்படும் கட்டண விகிதங்களை 1.6.08 முதல் செயல்படுத்தவும் தீர்மானம் நிறைவேற்றியது.

நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 70537/ 07 / கு.வ.3 நாள் 05.02.2009ன்படி பிற உள்ளாட்சி அமைப்புகளில் உருவாக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ள குடிநீர் விதிகளின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் பழைய மற்றும் புதிய குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து வசூல் செய்யவும், குழாய் இணைப்பினை முறைப்படுத்தவும், குடிநீர் விநியோக துணை விதிகளை உரிய திருத்தம் செய்து நடைமுறைப்படுத்த நிபந்தனைகளுடன் பொது அங்கீகாரம் (General approval) வழங்கியுள்ளார். இக்குடிநீர் கட்டணங்களை மன்றத் தீர்மானம் பெற்று நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

<u>அட்டவணை -2</u>

நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளரால் திருத்தம் செய்யப்பட்டுள்ள திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விபரம்

| வ. எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு | | பொது நிறுவனம் முதலியவற்றுக்கு மொத்த விநியோகம் 20mm விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | <u>வீட்டு உபயோகம் மாதம் ஒன்றிற்கு</u> | பழையது ரூ. | திருத்தியது ரூ. | பழையது ரூ. | திருத்தியது ரூ. |
| a | 7500 லிட்டர் வரை குறைந்தபட்சம் (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும்) | 3.50 | 4.50 | 3.50 | 5.25 |
| b | 7501 லிட்டர் முதல் 10000 லிட்டர் வரை (7500 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும்) | 4.00 | 6.00 | 4.00 | 6.00 |
| C | 10001 லிட்டர் முதல் 150000 லிட்டர் வரை (10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும்) | 5.00 | 8.00 | 5.00 | 8.00 |
| d | 150000 க்கு மேல் (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பகுதிக்கும்) | 6.50 | 10.00 | 6.50 | 11.00 |
| e | மாதம் ஒன்றிற்கு குறைந்த பட்ச கட்டணம் | 80.00 | 120.00 | 600.00 | 900.00 |
| 2 | <u>வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகங்களுக்கு</u> | பழையது ரூ. | திருத்தியது ரூ. | பழையது ரூ. | திருத்தியது ரூ. |
| a | 7500 லிட்டர் வரை (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும்) | 7.00 | 10.50 | 7.00 | 10.50 |
| b | 7501 லிட்டர் முதல் 10000 லிட்டர் வரை (7500 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும்) | 9.00 | 13.50 | 9.00 | 13.50 |
| C | 10001 லிட்டர் முதல் 150000 லிட்டர் வரை (10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும்) | 12.00 | 18.00 | 12.00 | 18.00 |
| d | 150000 க்கு மேல் (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பகுதிக்கும்) | 15.00 | 22.50 | 15.00 | 22.50 |
| e | மாதம் ஒன்றிற்கு குறைந்த பட்ச கட்டணம் | 350.00 | 525.00 | 900.00 | 1350.00 |
| | | | | | |

அட்டவணை வரிசை எண் 1(a ) 7500 லிட்டர் வரை குறைந்தபட்சம் திருத்தியது ரூ. 120.00 என செயல்முறைகளில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான தொகை ரூ. 4.50 என திருத்தம் செய்து வழங்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (ஒவ்வொரு குடிநீர் இணைப்பிற்கும் குடிநீர்மானி கணக்கெடுப்பிற்கு குறைந்தபட்ச கட்டணம் அட்டவணை (e)யில் உள்ளதுபோல் விதிக்கப்படும். மற்றும் குறைந்தபட்ச கட்டண அளவிற்கு மேல் உள்ள குடிநீர் மானி கணக்கெடுப்பிற்கு அட்டவணையில் உள்ளவாறு கணக்கீடு செய்து கட்டணம் விதிக்கப்படும்.)

திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் விநியோக வரைவு துணை விதிகள் இணைப்பில் தரப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ளவாறு திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் விநியோக துணை விதிகள் மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதத்தில் குடிநீர் கட்டணம் வசூலிக்கவும், குடிநீர் விநியோக துணை விதிகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u>

1. இணைப்பில் கண்டுள்ளபடி திருத்தியமைக்கப்பட்ட ''கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் விநியோக வரைவு துணை விதிகள்'' -ற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டம் இதுநாள்வரை இல்லாமல் இருந்து, தற்போது பில்லூர் 2 ம் குடிநீர் திட்டம் ரூ. 113.74 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருவதால், மேற்படி பணிக்காக மத்திய மாநில அரசின் 70% சதவிகிதம் மானியத் தொகை பெற்றது போக 30% சதவிகிதம் மாநகராட்சி பங்கு நிதியுடன், நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையும் மாநகராட்சி செலவளிப்பதுடன், மேற்படி செலவினத்தினை ஈடு செய்யவும், இயக்கம் பராமரிப்பு பணிக்கென குடிநீர் கட்டண விகிதத்தினை மாற்றியமைக்க வேண்டி உள்ளதால் அட்டவணை 2-ல் உள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்களுக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. குடிநீர் விதி மற்றும் துணை விதிகளின்படி குடிநீர் கட்டண விகிதங்களை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

4. திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் விகிதங்களை 1.10.09 முதல் அமல்படுத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 4848/2003/கு.வி 2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 28 நாள்: 22.06.2009</u>

மாமன்ற அனைத்துக் கட்சிக்குழுத்தலைவர்கள் கூட்டத்தில் விவாதித்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 29

பொருள் :– கோயம்புத்தூர் மாநகராட்சி – புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் பங்களிப்பு பிடித்தம் செய்தல் - சம்பந்தமாக.

———————

மாநில அரசு ஊழியர்களுக்கு 01.04.2003 முதல் அமுல்படுத்தப்பட்ட பங்குச் சந்தா ஓய்வூதிய திட்டத்தினை உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீடிப்பு செய்து இதற்குரிய ஆணையினை அரசு தனது ஆணை எண். 126, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, நாள். 20.02.2004ல் வெளியிட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்படி 01.04.2003க்கு பின்னர் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு இத்திட்டம் பொருந்துவதாகும். இதன்படி, இத்திட்டத்தில் உறுப்பினராக சேர ஏதுவாக 01.04.2003க்கு பின்னர் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் ஒவ்வொருவரும் மாத சந்தா தொகையாக அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி கூட்டுத் தொகையில் 10% பணியாளரின் சந்தா தொகையாக செலுத்தவும், இதற்கு இணையான தொகையினை நிர்வாகம் அப்பணியாளரின் பங்குச் சந்தா ஓய்வூதிய கணக்கில் ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் சந்தா தொகை பிடித்தம் செய்யப்படும் முன்னர் அரசு ஊழியர்களுக்கு மாநில கணக்காயர் அவர்களிடமிருந்து அட்டவணை எண். (Index No) பெறுதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இத்திட்டம் தொடர்பாக உள்ளாட்சி அமைப்புகளில் 01.04.2003க்கு பின்னர் பணியமர்த்தப்பட்ட மற்றும் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட பணியாளர்களுக்கு இத்திட்டக் கணக்கு பராமரிப்பு தொடர்பாகவும் தனியாக கணக்கு துவங்குவது குறித்தும் அட்டவணை எண் வழங்குவது தொடர்பாகவும் தெளிவுரைகள் கோரி இயக்குநர், உள்ளாட்சி தணிக்கைத் துறை, சென்னை அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இயக்குநர், உள்ளாட்சி தணிக்கைத் துறை அவர்களின் கடிதம் எண். 38641 / 2007 நாள். 22.05.2008ல் உள்ளாட்சி அமைப்புகளில் இத்திட்டம் செயல்பாடு குறித்து அரசுக்கு எழுதப்பட்டுள்ளதாகவும், அரசிடமிருந்து இப்பொருள் தொடர்பாக அறிவுரைகள் பெறப்படும் வரை இது தொடர்பாக தெளிவுரைகள் ஏதும் வழங்கப்பட இயலாத நிலை உள்ளது எனவும், மேற்கொண்டு இப்பொருள் தொடர்பாக நகராட்சி, நிர்வாக ஆணையரகத்தினை தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 01.04.2007க்குப் பின்னர் இம்மாநகராட்சியில் பல்வேறு பதவிகளில் பணியாளர்கள் புதிதாக பணியமர்த்தப்பட்டுள்ளதுடன், தவிர 01.04.2003க்கு முன்னர் ஏற்கனவே தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்தவர்களை 01.04.2003க்குப் பின்னர் பல்வேறு காலகட்டங்களில் பணிவரன்முறைப்படுத்தி ஊதிய ஏற்ற முறையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

எனவே, உள்ளாட்சி அமைப்புகள் இத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து அரசின் இறுதியான வழிகாட்டி நெறிமுறைகள் பெறப்பட்ட பின்னர் இதற்கான சந்தா தொகையினை முன்தேதியிட்டு நிலுவைத் தொகையும் நடப்பு பங்குத் தொகையும் பிடித்தம் செய்யப்படும் நிலையில் அது அப்பணியாளர்களுக்கு கூடுதல் சுமையாக அமையும் என்பது மட்டுமின்றி தற்போது 5 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் நிலுவை சந்தா தொகையினை நீண்ட காலத்திற்கு ஒவ்வொரு நடப்பு மாத சந்தா தொகையுடன் சேர்த்து பிடித்தம் செய்யும் சூழ்நிலை ஏற்பட காரணமாக அமையும்.

எனவே உள்ளாட்சி அமைப்புகள் இத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து அரசின் இறுதியான தெளிவுரைகள் பெறப்படுவதினை எதிர்நோக்கி 01.04.2003க்குப் பின்னர் புதிதாக நிரந்தரப் பணியிடங்களில் பணியமர்த்தப்பட்ட மற்றும் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு ஊதிய ஏற்ற முறைக்கு கொண்டு செல்லப்பட்ட பணியாளர்கள் அனைவருக்கும் மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்ட விவரப்படியான அடிப்படை ஊதியம் அகவிலைப்படி மற்றும் அகவிலை ஊதியம் ஆகியவற்றின் கூட்டுத் தொகைகளில் 10%—ஐ பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

01.07.2009 முதல் நடப்பு மாதங்களுக்கு மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யவும் 01.04.2003 முதல் 30.06.2009 வரை பிடித்தம் செய்ய வேண்டிய 75 மாதங்களின் நிலுவை சந்தா தொகையினை நடப்பு சந்தா தொகையுடன் ஒவ்வொரு மாதமும் ஒரு தவணையினை 01.07.2009 மாத ஊதியத்திலிருந்து தொடர்ந்து 75 மாதங்களுக்கு பிடித்தம் செய்யவும், ஒப்புதலுக்கு மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

01.04.2003க்கு பின்னர் பணிக்கு சேர்ந்துள்ளவர்களுக்கு ஜீன் 2009ம் மாதம் வரையுள்ள காலத்திற்கு உண்டான நிலுவை தொகையினை ஜீலை 2009 முதல் பிடித்தம் செய்யலாம்.

ஜீலை 2009ம் மாத ஊதியத்திலிருந்து அரசாணையில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை ஊதியம் அகவிலைப்படி மற்றும் அகவிலை ஊதியம் ஆகியவற்றின் கூட்டுத் தொகைகளில் 10%ஐ 75 மாத தவணைகளில் பிடித்தம் செய்யலாம்.

<u>அலுவலகக் குறிப்பு –</u>

தெளிவுரைகள் பெறப்பட்ட பின்னர் சந்தா பிடித்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பட்சத்தில் அது சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு கூடுதல் நிதிச் சுமையாக அமையும் என்பதால் பொருளில் தெரிவிக்கப்பட்ட விவரப்படி மாத சந்தா நடப்பு மற்றும் நிலுவையில் ஒரு தவணை ஆகியவற்றை 01.07.2009 முதல் ஒவ்வொரு மாத சம்பளத்திலும் சம்பந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து கணக்கிட்டு பிடித்தம் செய்து தனித்தலைப்பில் கணக்கு வைக்க மாமன்ற ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.5504 / 09 / பி.10

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 29  நாள்: 22.06.2009</u>

அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

-----------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 30

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடியில் செயல்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத்திட்ட செயலாக்கம் - பொது மக்களிடமிருந்து பராமரிப்புக் கட்டணம், இணைப்பு கட்டணம் மாற்றியமைத்து வசூலித்தல் - பாதாள சாக்கடைத் திட்ட செயலாக்க துணை விதிகள் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது – மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பு. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றம் தமது தீர்மான எண்.141 நாள் 01.06.1998ம் தேதிய தீர்மானத்தின்படி மாநகராட்சி பகுதிக்குள் இயங்கி வரும் பாதாள சாக்கடை இணைப்புகளுக்கு இணைப்புக் கட்டணம் மற்றும் மாதாந்திர சேவைக்கட்டணம் பயனீட்டாளர்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு வசூலிக்கவும் மேற்படி கட்டண விகிதங்கள் 01.07.1998 முதல் நடைமுறைப்படுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டது.

| சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் ரூ. | மாதாந்திர சேவைக் கட்டணம் | | இணைப்பு கட்டணம் | |
|---|---|---|---|---|
| | குடியிருப்பு ரூ. | குடியிருப்பு அல்லாதது ரூ. | வீட்டிற்குரிய கட்டணம் ரூ. | வர்த்தக ஸ்தாபனம்/ அடுக்குமாடி கட்டிடம்/ தொழிற்சாலை/ மருத்துவமனைகள் மற்றும் இதர நிறுவனங்கள் ரூ. |
| 300 | 200 | 500 | 1250 | 2400 |
| 300-1000 | 1450 | 3200 | 4500 | 10000 |
| 1100-5000 | 4700 | 8500 | 9000 | 17500 |
| 5000 | 7750 | 16500 | 14500 | 24000 |
| வருடாந்திர கட்டணம் | 2044 | 4063 | 4968 | 10180 |

மேற்படி கட்டண விகிதங்களின்படி பாதாள சாக்கடை இணைப்பு வழங்கவும், மாதாந்திர சேவை கட்டண விகிதங்களை கோவை மாநகராட்சி பொது மக்களிடமிருந்து வசூலிக்க பாதாள சாக்கடை திட்ட துணைவிதிகள் உருவாக்கப்படாததால், திருத்தப்பட்ட கட்டணங்களை முழுமையாக செயல்படுத்த இயலவில்லை.

இந்நிலையில், கோவை மாநகராட்சியில் இயக்கத்தில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்தினை புனரமைப்பு செய்யவும், விடுபட்டுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தவும் மாமன்றம் தனது 24.09.2007 ம் தேதிய தீர்மானம் 117ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மத்திய மாநில அரசின் பங்களிப்பு 70% சதவீதம் போக மீதமுள்ள 30% சதவீத தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து கடனாகப்பெற்று செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில் அரசு ஆணை (3 டி) எண்.25 நி.நி.ம.கு.வ. (நிதி 3) துறை 24.10.2007ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.274 நாள் 27-03-2008 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில், இத்திட்டத்தில் செலவழிக்க பெறப்படும் கடன் தொகையினை ஈடுகட்ட இணைப்பு வழங்கப்பட்டுள்ள மற்றும் இணைப்பு வழங்கப்படவுள்ள பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய மாதாந்திர பராமரிப்புக் கட்டணம் மற்றும் இணைப்புக் கட்டண விகிதங்கள் கீழ்க்கண்டவாறு வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| மாதாந்திர பராமரிப்பு கட்டணம் (ரூபாயில்) | | இணைப்பு கட்டணம் (ரூபாயில்) | |
|---|---|---|---|
| வீட்டு உபயோகம் | வீட்டு உபயோகம் அல்லாதது | வீட்டு உபயோகம் | வீட்டு உபயோகம் அல்லாதது |
| 170/- | 339/- | 4968/- | 10180/- |

1981 ம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாநகராட்சிகளின் சட்டம் (XXV/1981), பிரிவு எண்.196 முதல் 438 ன் படி பாதாள சாக்கடைத்திட்டம் செயல்படுத்துவதற்கான துணை விதிகள் (By-Laws) தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த துணைவிதிகளின்படி கோவை மாநகராட்சியின் எல்லைக்குள் இருக்கும் குடியிருப்பு, அடுக்குமாடி கட்டிடங்கள், தங்கும் விடுதி மற்றும் வியாபார நிறுவனங்களிடமிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுகள் வெளியேற்றுவதற்கான உபகரணங்கள் அமைத்தல், அதற்கான பாதாள சாக்கடை குழாய் இணைப்பு வழங்குதல், வீட்டு உபயோகம் /வீட்டு உபயோகம் அல்லாத முறையில் வழங்குதல் ஆகியவற்றிற்கு பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர சேவைக் கட்டணம் கணக்கிடப்பட்டு வசூலிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தமது தீ.எண்.56 நாள் 16-06-2008-ல் கீழ்க்கண்டவாறு (வைப்புத்தொகை) திருத்தம் செய்து ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வ.எண் | இணைப்பு தன்மை விவரம் | வைப்புத்தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | <u>வீட்டு உபயோகம்</u><br>கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வைப்புத் தொகை மற்றும் மேற்பார்வைக் கட்டணமாக செலுத்த வேண்டிய தொகை<br>(வைப்புத்தொகை ரூ 3,000.00 +<br>மேற்பார்வைக்கட்டணம் ரூ1,000.00) | 3,000.00 |
| 2. | <u>வீட்டு உபயோகம் அல்லாத தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்கள் / சிறு ஹோட்டல்கள் / மருத்துவமனைகள்</u><br>கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வைப்புத் தொகையாகவும், மேற்பார்வைக் கட்டணமாகவும் செலுத்த வேண்டிய தொகை<br>(வைப்புத்தொகை ரூ 20,000.00 +<br>மேற்பார்வைக்கட்டணம் ரூ1,000.00) | 20,000.00 |
| 3. | <u>நட்சத்திர உணவகம், நட்சத்திர உணவகத்திற்கு நிகரான பெரிய உணவகங்கள்</u><br>கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வைப்புத் தொகையாகவும், மேற்பார்வைக் கட்டணமாகவும் செலுத்த வேண்டிய தொகை<br>(வைப்புத்தொகை ரூ 25,000.00 +<br>மேற்பார்வைக்கட்டணம் ரூ1,000.00) | 25,000.00 |

| மாதாந்திர சேவைக் கட்டண விவரம் | | |
|---|---|---|
| 1. | குடியிருப்பு வீடு (Residential House) | |
| | அதாவது ஒரு வீட்டிற்கு | 150.00 |
| | 2 முதல் 5 வீடுகள் வரை | 200.00 |
| | 6 முதல்10 வீடுகள் வரை | 250.00 |
| | 10 க்கு மேல் உள்ள வீடுகளுக்கு | 350.00 |
| | வணிக வளாகங்கள் (Commercial Complex) | |
| | 1 முதல் 3 கடைகளுக்கு | 300.00 |
| | 4 முதல்10 கடைகளுக்கு | 350.00 |
| | 10 கடைகளுக்கு மேல் | 450.00 |
| 3. | தொழிற்சாலைகள் (Industries) | |
| | 10 பேர் வேலை செய்யும் இடத்திற்கு | 350.00 |
| | 11 பேர் முதல் 50 பேர் வேலை செய்யும் இடத்திற்கு | 400.00 |
| | 51 பேர் முதல் 100 பேர் வேலை செய்யும் இடத்திற்கு | 500.00 |
| | 100 பேருக்கு மேல் வேலை செய்யும் இடத்திற்கு | 600.00 |
| 4. | மருத்துவமனைகள் (Hospital) | |
| | 1 முதல் 10 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | 300.00 |
| | 11 முதல் 25 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | 400.00 |
| | 25 க்கு மேல் உள்ள படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | 500.00 |
| 5. | தங்கும் விடுதிகள் (Hostel, Lodge) | |
| | 1 முதல் 10 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | 400.00 |
| | 11 முதல் 25 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | 500.00 |
| | 25 க்கு மேல் உள்ள படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | 600.00 |
| 6. | உணவு விடுதிகள் (Restaurant) | |
| | நடுத்தரம் வரை | 400.00 |
| | நட்சத்திர உணவகத்திற்கு நிகரான பெரிய உணவகங்கள் மற்றும் 3 நட்சத்திர உணவகங்களுக்கு | 1,500.00 |
| | மூன்று நட்சத்திர உணவகங்களுக்கு மேல் உள்ளவைகளுக்கு | 2,500.00 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

(அ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளில் ஒன்றான ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் ரூ 377.13 கோடி செலவில் செயல்படுத்த மத்திய மற்றும் மாநில அரசு வழங்கும் மொத்த மதிப்பீட்டில் 70 சதவீதம் மானிய தொகை போக மீதமுள்ள 30 சதவீதம் மாநகராட்சி பங்கு தொகையினை கடனாகவோ அல்லது மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ செலவழித்து திட்டத்தினை நிறைவேற்ற இணைப்புதாரர்களிடமிருந்து திருத்தியமைக்கப்பட்ட மாதாந்திர சேவை கட்டணம் மற்றும் இணைப்பு கட்டணம் வசூலித்தல் தவிர்க்க இயலாது. மேலும், ஜவஹர்லால்

நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கட்டாய சீர்திருத்தங்கள் (Mandatory Reforms) மாமன்றம் தனது தீர்மானம் எண்.233 நாள் 22-01-2008 அமுல்படுத்த ஒப்புதல் அளித்து உள்ளது. அதன்படி, பயனாளிகளிடமிருந்து சேவை கட்டணத்தினை பராமரிப்பு செலவுகளை ஈடு செய்யும் வகையில் வசூலிக்கப்படல் வேண்டும்.

(ஆ) பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக புதிதாக உருவாக்கப்பட்ட துணைவிதிகளின்படி திருத்தி அமைக்கப்பட்ட மாதாந்திர சேவைக் கட்டணம், இணைப்பு கட்டணம், மாநகராட்சியிலுள்ள பழைய மற்றும் புதிய இணைப்பு பெறும் பயனாளிகளிடமிருந்து வசூலிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தமது தீர்மான எண். 56 நாள் 16-06-2008-ல் திருத்தம் செய்து ஒப்புதல் வழங்கியுள்ளது.

(இ) பாதாள சாக்கடை திட்ட துணை விதிகளை நகராட்சி நிர்வாக இயக்குநரக முதன்மைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெறலாம்.

(ஈ) பாதாள சாக்கடை கட்டண விவரங்கள் மற்றும் துணை விதிகள் பற்றிய பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் (கருத்து) பெறவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.12069/2006/ப.வ.(எம்)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 30 நாள்: 22.06.2009</u>

மாமன்ற அனைத்து கட்சிக்குழுத் தலைவர்கள் கூட்டத்தில் விவாதித்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 31

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்திக் கொள்ள தமிழக அரசின் அரசாணை எண். 59 ந.நி.(ம)கு.வ.துறை நாள். 25.7.2006 மூலம், கடந்த 31.12.2007-ம் தேதியுடன் முடிவடைந்த கால அவகாசத்தில் 761 மனைப்பிரிவுகளில் உள்ள 37567 மனையிடங்களில் சுமார் 30677 மனையிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டு அதன்மூலம் ரூ. 40.45 கோடி வசூல் செய்யப்பட்டது.

பின், தற்பொழுது தமிழக அரசால் அரசு ஆணை நிலை எண். 244 ந.நி. (ம). கு.வ. (ந.நீ.1) துறை நாள் 5.12.2008-ன் மூலம் 5.12.2008 முதல் 4.6.2009 வரையிலான 6 மாதகால அவகாசம் நீடிப்பு செய்யப்பட்டதில், மேலும் 1710 மனையிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டு அதன் மூலம் ரூ. 1,87,19,687 ஆனது வசூல் செய்யப்பட்டுள்ளது.

எனவே இதுவரை கோயம்புத்தூர் மாநகராட்சியில் அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல் திட்டத்தின்கீழ் மொத்தம் 32387 மனையிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டு அதன் மூலம் ரூ. 42.33 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இதில் அணுகு சாலை 16 அடிக்கும் குறைவானதாக அமைந்துள்ள மனைப்பிரிவுகளில் 3602 மனையிடங்களும் மற்றும் அரசு உபரி நிலங்களாக உள்ள 2570 மனையிடங்களும் வரன்முறைப்படுத்த இயலாமல் உள்ளது. தெற்கு மண்டல தலைவர் அவர்கள் தனது 6.6.2009 ஆம் நாளைய கோரிக்கை, வடக்கு மண்டலம் மாணிக்க வாசக நகர் நலச்சங்கம் மற்றும் இதர நகர்நலச் சங்கங்கள், அணுகு சாலையின் அகலம் 16 அடிக்கும் குறைவாக உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள சுமார் 3602 மனைகளையும் முறைப்படுத்த அரசு மூலம் ஆவண செய்யக் கோரியுள்ளனர்.

எனவே அணுகு சாலை 16 அடிக்கும் குறைவான 3602 மனையிடங்களை வரன்முறைப்படுத்துவது குறித்தும், அல்லது அப்பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது குறித்தும் உரிய உத்திரவினை அரசிடம் இருந்து பெறுவது குறித்து, அரசிற்கு உரிய முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 12042/1999/எம்.எச். 5

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 31 நாள்: 22.06.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 32**

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – ஓய்வூதியர் நலன் – மாநகராட்சி மற்றும் நகராட்சிகள்– ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவி திட்டம் – அமுல்படுத்துதல் – தொடர்பாக.

பார்வை :– 1. அரசாணை நிலை எண். 120, ந.நி. மற்றும் கு.வ. துறை நாள். 20.05.1999

2. தலைவர் கோயம்புத்தூர் மாநகராட்சி ஓய்வூதியர் சங்கம் விண்ணப்ப நாள் 17.03.2009.

* * * * *

பார்வை 1ல் காணும் அரசாணையில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவி திட்டம் அரசாணை நிலை எண். 120 ந.நி மற்றும் கு.வ. துறை நாள் 20.05.99ல் நடைமுறைப்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தில் குடும்ப பாதுகாப்பு திட்டத்திற்கு ரூ.70/–ம் மருத்துவ உதவி திட்டத்திற்கு ரூ. 30/–ம் ஆக மொத்தம் ரூ.100/–ஐ மாதாந்திர சந்தாத் தொகையாக பிடித்தம் செய்யப்படவேண்டுமெனவும், இத்திட்டம் 01.8.1999 முதல் செயல்படுத்த தொடங்கும், ஓராண்டு சந்தாத் தொகை செலுத்திய பின்னரே இத்திட்டத்தின் பயன் அடைய இயலும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி இத்திட்டத்தில் சேருவதற்கு 30.06.99க்குள் விருப்பம் தெரிவிக்க வேண்டும் எனவும், 50 விழுக்காட்டிற்கும் குறைவாக ஓய்வூதியதாரர்கள் விருப்பம் தெரிவித்தால் திட்டங்கள் செயல்படுத்தப்படமாட்டாது எனவும் மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டிய தேதியாகிய 30.06.99ல் இம்மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 810 ஆக இருந்தது. இதில் 325 ஓய்வூதியதாரர்கள் மட்டுமே இத்திட்டத்தில் சேர விருப்பம் தெரிவித்திருந்தனர். எனினும் இம்மாநகராட்சியில் அனைத்து ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தில் மருத்துவ உதவி திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு திட்ட சந்தாத் தொகையாக மாதம் ரூ. 100/– வீதம் 01.08.1999 முதல் 30.11.2003 முடிய சந்தா தொகை பிடித்தம் செய்யப்பட்டு வந்தது.

அரசு செயலர் கடித எண். 34381 / மா ந 3 / 2000–7 நாள். 10.04.2001ல் இத்திட்டத்திற்காக அளிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகளில் மாநகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவித் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு திட்டத்திற்கு சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையாளரே ஓய்வூதியதாரர்களிடமிருந்து சந்தா தொகை வசூலிப்பதற்கும் மற்றும் இத்திட்டங்களின் கீழ் உதவித் தொகை வழங்குவதற்கும் உரிய அலுவலராவார் என்றும், மேலும் மாநகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவித் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டத்திற்கான செலவினங்கள் மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியை பொருத்தவரை மேற்படி திட்டங்களில் சேருவதற்கு 50 விழுக்காட்டிற்கு குறைவான ஓய்வூதியதாரர்கள் மட்டுமே விருப்பம் தெரிவித்திருந்ததால் இவ்வலுவலக கோப்பு எண். 10916 / 99 / பி.22–ல் ஆணையரின் 18.12.2003ம் தேதிய உத்திரவுப்படி 01.08.1999 முதல் 30.11.2003 முடிய பிடித்தம் செய்யப்பட்ட சந்தா தொகை ரூ.5200/– வீதம் அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் திரும்ப வழங்கப்பட்டுவிட்டது. இதனால் இம்மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவி மற்றும் குடும்ப பாதுகாப்பு திட்டம் செயல்படுத்த இயலவில்லை.

பார்வை 2ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஓய்வூதியதாரர்கள் சங்க பிரதிநிதிகளின் 17.03.2009ம் தேதிய கடிதத்தில் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவி திட்டத்தினை மட்டும் இம்மாநகராட்சியில் அமுல்படுத்தப் படவேண்டும் என்றும், இத்திட்டத்தில் சேருவதற்கு ஓய்வூதியதாரர்களிடமிருந்து சம்மதக் கடிதம் பெற்று வழங்குவதாகவும், இத்திட்டத்திற்கான சந்தாத் தொகையினை மாத ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்து கொள்ளுமாறும் தெரிவித்துள்ளனர்.

ஓய்வூதியதாரர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை முழுவதும் திரும்ப வழங்கப்பட்டு நாளது தேதி வரை திட்டம் அமல்படுத்தப்படாத நிலையில், கோயம்புத்தூர் மாநகராட்சி ஓய்வூதியர்கள் சங்க பிரதிநிதிகளின் விண்ணப்பத்தில் கேட்டுக் கொண்டுள்ளவாறு, ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவி திட்டத்தினை செயல்படுத்த மேற்படி அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி 01.08.1999 முதல் 31.03.2008 முடிய மாதாந்திர சந்தாத் தொகையாக ரூ.30/– வீதமும், 01.04.2008 முதல் மாதாந்திர சந்தா தொகையாக ரூ.50/– வீதமும் ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்து கொண்டு 01.06.2009 முதல் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவி திட்டத்தினை இம்மாநகராட்சியில் அமுல்படுத்தவும் 01.08.1999 முதல் 31.05.2009 முடிய பிடித்தம் செய்யப்பட வேண்டிய நிலுவை சந்தா தொகை ரூ.3,820/–ஐ 20 சமதவணைகளில் பிடித்தம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.2763/ 09/ B 1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 32 நாள்: 22.06.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 33

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறுபகுதிகளாகப் பிரித்து I-வது சிப்பப் பணியான பில்லூர் அணைக்கட்டிலிருந்து பெரியகோம்பை குகை நுழைவு வாயில் வரை குடிநீர் கொண்டு செல்லும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியில் பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை மற்றும் 1500 மிமீ விட்டமுள்ள நீரேற்று பிரதான குழாய் 317 மீட்டர் நீளத்திற்கு அமைக்கும் பணிக்காக பில்லூர் அணைப்பகுதிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் வட்டம், கோபினாரி வனத்துறையின் பாதுகாக்கப்பட்ட காடுகள் பகுதியில் 1.94 ஹெக்டேர் நிலம் தேவைப்படுவதால், வனத்துறைக்கு சொந்தமான இந்நிலத்தினை மாநகராட்சி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட வனத்துறைக்கு சொந்தமான 1.94 ஹெக்டேர் நிலத்தில் கீழ்குறிப்பிட்ட 11 மலைவாழ் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | குமார், த/பெ. ரங்கசாமி | நெல்லிமரத்தூர், பில்லூர் டேம் அருகில், மேட்டுப்பாளையம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2. | முருகன், த/பெ. ரங்கசாமி | ' ' |
| 3. | ரங்கன், த/பெ. மருதன் | ' ' |
| 4. | வடுகன், த/பெ. நஞ்சன் | ' ' |
| 5. | ரங்கன், த/பெ. மணியன் | ' ' |
| 6. | லட்சுமணன், த/பெ. மணியன் | ' ' |

| | | |
|---|---|---|
| 7. | பழனிச்சாமி, த/பெ. லட்சுமணன் | ' ' |
| 8. | நஞ்சன், த/பெ. ரங்கசாமி | ' ' |
| 9. | ஆறுமுகம், த/பெ. காடன் | ' ' |
| 10. | சுப்ரமணியன், த/பெ. ரங்கசாமி | ' ' |
| 11. | ரங்கசாமி, த/பெ. கக்கு | ' ' |

வனத்துறையினரிடமிருந்து நிலத்தினை பெறுவதற்கு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், கீழ்க்கண்ட நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளுக்கு மாநகராட்சி ஒப்புதல் வழங்கினால் மட்டுமே நிலம் வழங்க இயலும் என வனத்துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதன்விபரம்

I) அ) வனத்துறையின் 1.94 ஹெக்டேர் நிலத்தினை மாநகராட்சி எடுத்துக் கொள்ளும்பட்சத்தில், அந்நிலத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களால் செய்யப்படும் விவசாய பணி பாதிப்பு ஏற்படுவதால் ஏற்படும் இழப்புத் தொகையினை கணக்கிட்டு தெரிவிக்கவும், தொகையினை இந்நிலத்தினால்பாதிக்கப்படும் 11 குடும்பத்திற்கு சமமாக பிரித்துத் தர வேண்டும்.

ஆ) மேற்படி நிலத்தினை பயன்படுத்திவரும் 11 மலைவாழ் குடும்பத்தைச் சார்ந்தவர்களிடம் இந்நிலத்தினை மாநகராட்சிக்கு வழங்க அவர்களது ஒப்புதல் கடிதம் பெற வேண்டும்.

இ) 11 மலைவாழ் மக்கள் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் மாநகராட்சியால் மின்சார வசதி, சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும்.

ஈ) 11 மலைவாழ் குடும்பத்தினருக்கும் குடும்ப தலைவர் குறிப்பிடும் ஒரு நபருக்கு அவரின் கல்வித் தகுதிக்கேற்ப, திட்டப்பணிகளில் உருவாக்கப்படும் கீழ்மட்ட பணியிடங்களில் வேலை வாய்ப்புத் தரவேண்டும்.

II) மாநகராட்சியின் பில்லூர் II குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் வனத்துறையின் 1.940 ஹெக்டேர் நிலத்திற்கு மாற்று நிலமாக (Compensatory Afforestation) இருமடங்கு நிலமான 4.00 ஹெக்டேர் நிலத்தை வனத்துறை எடுத்துக்கொள்ள சம்மதிக்கும் நிலமாக வழங்க வேண்டும்.

மாநகராட்சியின் மூலம் வனத்துறைக்கு வழங்க வேண்டிய 4.00 ஹெக்டேர் நிலத்தினை கணக்கீடு செய்து தர மாவட்ட நிர்வாகத்தினை கேட்டுக்கொண்டதின்பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்கள் இருமடங்கு நிலமான 3.88 ஹெக்டேர் அல்லது 4.00 ஹெக்டேர் நிலத்தினை தென்கரை கிராமத்தில் க.ச.எண். 499—ல் வருவாய்த் துறைக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்திலிருந்து வனத்துறைக்கு நிலமாற்றம் செய்து தர சம்மதித்தும், மேற்படி நிலத்தினை எடுத்துக்கொள்ள வனத்துறையினரின் சம்மதம் பெற்றும் அரசு செயலாளர், வருவாய்த்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9 க்கு நிலமாற்றத்திற்கு பரிந்துரைத்தும், மாநகராட்சி 4.00 ஹெக்டேர் நிலத்தினை வருவாய் துறைக்கு வழங்கவோ (அல்லது) அதற்குண்டான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகையினை ரூ. 13.84 லட்சத்தினை வழங்க பரிந்துரை செய்து ந.க.எண். 45340/2005/ஆ7 நாள் 22.05.09—ன்படி அனுப்பி உள்ளார்.

மேற்குறிப்பிட்டு உள்ளதின்படி கோவை மாநகராட்சி குடிநீர் திட்டப்பணிக்கு தேவைப்படும் 1.94 ஹெக்டேர் நிலத்தினை அதற்குண்டான நடைமுறை, வழிமுறை நிபந்தனைகள்படி பெற நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அ) பில்லூர் II குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் மேட்டுப்பாளையம் வட்டம் கோபினாரி காடுகள் பகுதியில் 1.94 ஹெக்டேர் 11 குடும்ப மலைவாழ் மக்களால் நிலத்தினை வனத்துறையிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) 1.94 ஹெக்டேர் நிலத்தினை பயன்படுத்தி விவசாயம் செய்துவரும் மலைவாழ் மக்களின் 11 குடும்பத்தில், ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பில்லூர் குடிநீர் திட்ட செயலாக்கத்திற்கு தோற்றுவிக்கப்படும் கீழ்மட்ட பணியிடங்களில் பணியமர்த்தவும், அதற்கான அனுமதியினை அரசிடமிருந்து பெறவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) வனத்துறைக்கு சொந்தமான 1.94 ஹெக்டேர் நிலத்தில் மலைவாழ் மக்களால் விவசாயம் செய்யப்படுவது தற்போது பாதிப்பு ஏற்படுவதால் ஏற்படும் இழப்பினை வனத்துறை / வருவாய்த்துறை வழிகாட்டுதல்படி கணக்கிட்டு தெரிவிக்கப்படும் தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்படி 11 மலைவாழ் குடும்பத்திற்கு சமமாக பிரித்து வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஈ) 11 மலைவாழ் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

உ) 11 மலைவாழ் மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் தெருவிளக்கு வசதி, சாலைவசதி மற்றும் குடிநீர் வசதியினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஊ) கோவை மாநகராட்சிக்கு பில்லூர் II குடிநீர் திட்டத்திற்கென தேவைப்படும் வனத்துறையின் நிலமான 1.940 ஹெக்டேர் பரப்பளவு நிலத்திற்கு பதிலாக இருமடங்கு நிலமான 3.88 ஹெக்டேர் அல்லது 4.00 ஹெக்டேர் தென்கரை கிராமத்தில் க.ச.499–ல் வருவாய்த் துறைக்கு சொந்தமான மலைப் புறம்போக்கு நிலத்திலிருந்து வனத்துறைக்கு பரிவர்த்தனை மூலம் நிலமாற்றம் செய்துதர கோவை மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யவும், மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை கடிதம் எண் 45340/2005/ஆ7 நாள் 22.05.09–ன்படி மேற்படி நிலத்திற்குண்டான அரசு வழிகாட்டி மதிப்பின்படி ரூ.13.84 லட்சம் தொகையினை மாநகராட்சியின் மூலம் வருவாய் துறைக்கு வழங்கவோ அல்லது மாநகராட்சியின் நிலமான 4.00 ஹெக்டேர் நிலத்தினை வருவாய் துறைக்கு பரிவர்த்தனை மூலம் வழங்கவோ மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 9190/08/JN2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 33 நாள்: 22.06.2009</u>

அ) பில்லூர் II குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் மேட்டுப்பாளையம் வட்டம் கோபினாரி காடுகள் பகுதியில் 1.94 ஹெக்டேர் 11 குடும்ப மலை வாழ் மக்கள் பயன்படுத்தி வரும் வனத்துறை நிலத்தினை, வனத்துறையிடமிருந்து மாநகராட்சி பெற நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

ஆ) 1.94 ஹெக்டேர் நிலத்தினை பயன்படுத்தி விவசாயம் செய்து வரும் மலைவாழ் மக்களின் 11 குடும்பத்தில், ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அவர்களின் கல்வித் தகுதிற்கேற்ப பில்லூர் குடிநீர் திட்ட செயலாக்கத்திற்கு தோற்றுவிக்கப்படும் பணியிடங்களில் பணியமர்த்தவும், அதற்கான அனுமதியினை அரசிடமிருந்து பெறவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

இ) வனத்துறைக்குச் சொந்தமான 1.94 ஹெக்டேர் நிலத்தில் மலைவாழ் மக்களால் விவசாயம் செய்யப்படுவது தற்போது பாதிப்பு ஏற்படுவதால் ஏற்படும் இழப்பினை வனத்துறை / வருவாய்த்துறை வழிகாட்டுதல்படி கணக்கிட்டு தெரிவிக்கப்படும் தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்படி 11 மலைவாழ் குடும்பத்திற்கு சமமாக பிரித்து வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

ஈ) 11 மலைவாழ் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற் கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

உ) 11 மலைவாழ் மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் தெருவிளக்கு வசதி சாலை வசதி மற்றும் குடிநீர் வசதியினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

ஊ) கோவை மாநகராட்சிக்கு பில்லூர் II குடிநீர் திட்டத்திற்கென தேவைப்படும் வனத்துறையின் நிலமான 1.940 ஹெக்டேர் பரப்பளவு நிலத்திற்கு பதிலாக இருமடங்கு நிலமான 3.88 ஹெக்டேர் அல்லது 4.00 ஹெக்டேர் நிலத்தினை தென்கரை கிராமத்தில் க.ச.499-ல் வருவாய்துறைக்கு சொந்தமான மலைப் புறம்போக்கு நிலத்திலிருந்து வனத்துறைக்கு பரிவர்த்தனை மூலம் நிலமாற்றம் செய்து தர கோவை மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை கடிதம் எண். 45340/2005/ஆ7 நாள் 22.05.2009 ன் படி மேற்படி நிலத்திற்குண்டான அரசு வழிகாட்டி மதிப்பின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 13.84 லட்சம் தொகையினை மாநகராட்சியின் மூலம் வருவாய்த்துறைக்கு வழங்க அல்லது மாநகராட்சியின் நிலமான 4.00 ஹெக்டேர் நிலத்தினை வருவாய்த்துறைக்கு பரிவர்த்தனை மூலம் வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 34**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், பில்லூர் அணைப் பகுதியிலிருந்து கோவை மாநகராட்சி, 22 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராம குடியிருப்புகளுக்கென கடந்த 1995–ம் ஆண்டில் பில்லூர் முதலாவது கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் நாளொன்றுக்கு 125.00 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பப்பட்ட குடிநீர் பெறவும் அதில் 50% சதவீத கொள்ளளவான 62.500 மில்லியன் லிட்டர் குடிநீர் நாள் ஒன்றுக்கு கோவை மாநகராட்சிக்கு வழங்கும் வகையில் திட்டமிட்டு இயங்கி வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் மாநகராட்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்ளளவு குடிநீர் நீரழுத்தத்தால் ஏற்படும் பிரதான குழாய் கசிவு, பிரதான குழாய் உடைதல், அடிக்கடி ஏற்படும் மின்தடை, மின்மோட்டார் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளால் முழுமையாக நாள் ஒன்றுக்கு மாநகராட்சிக்கு கிடைக்க பெறுவதில்லை.

இந்நிலையில் பில்லூர் II - வது தனி குடிநீர் திட்டம் கோவை மாநகராட்சிமூலம் ரூ. 113.74 கோடி செலவில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தில் மேற்கொள்ளவும், அதற்கான நிதியில் 50% சதவீத நிதியினை மத்திய அரசும், 20% சதவீத நிதியினை மாநில அரசும் மானியமாக வழங்க மீதமுள்ள 30% சதவீத பங்கு நிதியினை மாநகராட்சி செலவழித்து திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கபெறும் 125 மில்லியன் லிட்டர் கொள்ளளவு குடிநீர் கோவை மாநகராட்சிக்கு கிடைக்க பெற்ற பின்னர், பில்லூர் I–வது குடிநீர் திட்டத்தின்மூலம் பெறப்படும் 62.50 மில்லியன் லிட்டர் குடிநீரினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திரும்பபெற்று மாநகராட்சியினை ஒட்டியுள்ள 24 உள்ளாட்சி அமைப்புகளுக்கும், 965 கிராம குடியிருப்புகளுக்கும் பகிர்ந்தளிக்கத்தக்கவகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.122.31 கோடி செலவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தற்போது கோவை மாநகராட்சியினை ஒட்டியுள்ள சிறப்பு பொருளாதார மண்டல தொழிற்சாலைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்கா மையங்களுக்கு தினசரி 6 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் I–வது குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் குடிநீர் கொள்ளளவிலிருந்து வழங்குவதற்கென ரூ. 16.85 கோடி செலவில் திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின்

ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் கோவை மாநகராட்சிக்கு பில்லூர் I திட்டத்தில் தினசரி வழங்க வரையறைக்கப்பட்டுள்ள 62.50 மில்லியன் லிட்டர் குடிநீர் நாள்ஒன்றுக்கு என்ற கணக்கிலிருந்து குறையக் கூடாதெனவும், கோவை மாநகராட்சியால் செயல்படுத்தபட்டுவரும் பில்லூர் II குடிநீர் திட்டம் முடிவுற்று, புதிதாக அமைக்கப்படும் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பம்பிங் செய்து பெறப்படும் 125 மில்லியன் லிட்டர் குடிநீர் கட்டன் மலை குகையில் பில்லூர் I திட்டத்தில் இருந்து பம்பிங் செய்யப்படும் குடிநீருடன் சேர்ந்து பின்னர் கட்டன் மலை குகையிலிருந்து வெளியேறி கோவை மாநகராட்சிக்கு 125 மில்லியன் லிட்டர் கிடைக்க பெறும் வகையில் தற்போது பெறப்பட்டுவரும் பில்லூர் I குடிநீர் திட்டத்தின் வடிவமைக்கப்பட்ட 62.50 மில்லியன் லிட்டர் குடிநீர் கொள்ளளவிற்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாமல் மலை குகையிலிருந்து பிரிந்து செல்லும் இடத்தில் இப்புதிய திட்டதிற்கான குழாய் பதிக்க கூடாதெனவும் மாநகராட்சியின் மூலம் கருத்து தெரிவிக்கப்ட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோவை மாநகராட்சி, 22 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராம குடியிருப்புகளுக்கென உருவாக்கப்பட்டுள்ள பில்லூர் I குடிநீர் திட்டத்திலிருந்து கோவை மாநகரினை ஒட்டியுள்ள சிறப்பு பொருளாதார மண்டலத் தொழிற்சாலைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்கா மையங்களுக்கு 6 எம்.எல்.டி. குடிநீர் வழங்குவது குறித்து மாமன்றம் பரிசீலனை செய்து கருத்தினை பதிவு செய்யவும், அதனை அரசிற்கு தெரிவிக்க வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – இப்பொருள் குறித்து மாமன்றம் பதிவு செய்ததை அரசிற்கு தெரிவிக்கலாம்.

ந.க.எண்:17493/08/JN2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 34 நாள்: 22.06.2009</u>

தற்போதுள்ள சிறுவாணி மற்றும் பில்லூர் I குடிநீர் திட்டங்களிலிருந்து வடிவமைக்கப்பட்ட கொள்ளளவின்படி, குடிநீர் மாநகராட்சிக்கு கிடைக்கப் பெறாத நிலையில், கோவை மாநகராட்சியின் தனி குடிநீர் திட்டமான பில்லூர் 2 ம் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்பாட்டிற்கு வந்தபின்னரே, முதலாம் குடிநீர் திட்டத்திலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 6 MLD கொள்ளளவு குடிநீரினை, சிறப்பு பொருளாதார மண்டல தொழிற்சாலைகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப பூங்கா மையங்களுக்கு வழங்க அரசினை வலியுறுத்தி கேட்டுக் கொள்ள மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 35

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி மதிப்பீட்டில் பில்லூர் –II வது குடிநீர் திட்டப் பணிகள் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. அதில் சிப்பம் (6) பணியான ராமகிருஷ்ணாபுரத்தில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதான மேல்நிலை தொட்டி (MSR) கட்டுதல் பணிக்கு, மூன்றாவது முறையாக 11.12.2008 ல் ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய மெஸ்ஸர்ஸ் ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி கடந்த 09.02.2009–ல் திறக்கப்பட்டது.

ஒப்புநோக்கு பட்டியலின்படி மேற்படி நிறுவனம் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 72.74% (சதவீதம்) கூடுதலாக ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கியதால், பொறியியல் நடைமுறை விதி எண்: 2.8–ன் படி விலைக்குறைப்பு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு, இருமுறை விலைக்குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 29.90% (சதவீதம்) கூடுதலாக ஒப்புக்கொண்டு வழங்கிய ஒப்பந்த விலைப்புள்ளி தொகையான ரூ.4,68,76,286/–ஐ மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவும், அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் தனது தீர்மான எண்: 358 நாள் 19.02.2009–ல் ஒப்புதல் வழங்கியது.

இந்நிலையில் மேற்படி நிறுவனம் மேலும் தானாக முன்வந்து கடந்த 18.02.2009 தேதியிட்ட கடிதத்தில், தனது 11.12.08 ம் தேதிய ஒப்பந்தவிலைப்புள்ளியில் 25.10% (சதவீதம்) விலைக்குறைப்பு செய்தும், ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 29.38% (சதவீதம்) கூடுதலான தொகையான ரூ.4,66,89,278/–க்கு பணியினை மேற்கொள்ள அளித்த மூன்றாவது சம்மத கடிதத்தின் விபரமும் மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு கடந்த 26.02.2009–ம் தேதியன்று கூடி ஒப்பந்த விலைப்புள்ளியினை தீவிரமாக பரிசீலனை செய்து, மேற்படி நிறுவனத்தினை பொறியியல் நடைமுறை விதி எண். 2.8ன் படி மேலும் விலைகுறைப்பு செய்து தர கேட்டுக் கொண்டதின் பேரில், மேற்படி நிறுவனமான மெஸ்ஸார்ஸ். ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர், தனது 26.02.2009ம் தேதியிட்ட நான்காவது சம்மத கடிதத்தில் கீழ்கண்ட விபரப்படி தனது 11.12.08 தேதிய ஒப்பந்த விலைப்புள்ளியில் 25.90% (சதவீதம்) குறைத்தும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 28% (சதவீதம்) கூடுதலான தொகையான ரூ.4,61,90,500/– மதிப்பில் பணியினை மேற்கொள்ள சம்மத கடிதம் கொடுத்தற்கிணங்க, மேற்படி நிறுவனத்தின் நான்காவது விலைக்குறைப்பு ஒப்பந்த விலைப்புள்ளியினை ஏற்கலாமென மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்தவிலைப் புள்ளி விபரம் (விலைகுறைப்புக்கு பின்னர்) | மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | M/s ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் | ரூ.3,60,86,328.00 | ரூ.6,23,35,485.00 | -<br>13.02.09<br>16.02.09<br>18.02.09<br>26.02.09 | –<br>ரூ.5,31,09,834.00<br>ரூ.4,68,76,286.00<br>ரூ. 4,66,89,280.00<br>ரூ. 4,61,90,500.00 | 72.74 %<br>47.17 %<br>29.90 %<br>29.38 %<br>28.00 % |

<u>அலுவலகக்குறிப்பு</u>: மேற்கண்ட பணிக்கு மூன்றாம் முறையாக ஒப்பந்த விலைப்புள்ளி கோரியதில் மெஸ்ஸார்ஸ். ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி இரண்டாவது விலைக்குறைப்பிற்கு பின்னர், ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 29.90% (சதவீதம்) அதிகமாக இருந்ததை மாமன்ற தீர்மானம் எண்: 358 நாள் 19.02.2009–ல் மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு பரிந்துரை செய்த பின்னர் மேற்படி நிறுவனம் தானாக முன்வந்து 18.02.2009–ம் தேதி வழங்கிய மூன்றாவது விலைக்குறைப்பு கடிதம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு கேட்டுக் கொண்டதற்கிணங்க நான்காவது முறையாக 26.02.09ம் தேதியில் வழங்கிய விலைகுறைப்பு கடிதத்திற்கு பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 28% (சதவீதம்) கூடுதலாக, (ஒப்பந்த மதிப்பு ரூ. 4,61,90,500/–) பணி மேற்கொள்ள சம்மதம் அளித்ததை மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு ஏற்று பரிந்துரை செய்துள்ளதை மாமன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 4615 /08 / JN2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 35 நாள்: 22.06.2009</u>**

அலுவலகக் குறிப்பு பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 36

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சியிலுள்ள சந்தைகள், பேருந்து நிலையங்கள், வாகனங்கள் நிறுத்துமிடங்கள், கட்டண கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து இனங்களிலும் கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம் - குத்தகைக்கு விடுதல் குறித்து 2009-10 ஆம் ஆண்டு முதல் திருத்திய நடைமுறைகள் - ஆணைகள் வெளியிடப்பட்டது – மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக.

பார்வை - அரசு ஆணை (நிலை) எண். 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை -9 நாள். 25.05.2009

------------

பார்வையில் காணும் அரசாணை (நிலை) எண். 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009-ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள சந்தைகள், பேருந்து நிலையங்கள், வாகனங்கள் நிறுத்துமிடங்கள், கட்டண கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து இனங்களுக்கும் 2009-10ம் ஆண்டு முதல் குத்தகை கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம், திருத்திய நடைமுறை ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண். 5340/2009/எம்ஏ.1

## மாநகர மன்ற தீர்மானம் எண்: 36 நாள்: 22.06.2009

அரசு ஆணை (நிலை) எண். 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009 ஐப் பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 37

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 33-வது வார்டு டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் மீன் வளத்துறையினருக்கு (10' X11' ) அளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது – அவ்விடத்தில் சற்று கூடுதல் இடம் ஒதுக்கீடு கொடுக்க கேட்டுள்ளது – தொடர்பாக.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம், டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில், மீன்வளத்துறையினருக்கு மாமன்ற தீர்மான எண் 179 நாள் 29.8.2008-ன்படி, (10' X11' ) அளவு கொண்ட இடத்தை ரூ. 3,386/- மாதாந்திர உரிமக் கட்டணம் (வாடகை) அடிப்படையில் தற்காலிகமாக நிபந்தனைகளுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திலிருந்து தமிழகத்தில் உள்ள பெரிய நகரங்களில், நவீன மீன் அங்காடி அமைத்திடுவதற்கு NADB (National Agricultural Development Board) மற்றும் NFDB (National Fisheries Development Board) ஆகியவற்றிலிருந்து ரூ. 50/- லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

ஏற்கனவே சென்னை மாநகரத்தில் நவீன மீன் அங்காடிகள் துவக்கப்பட்டு சுத்தமாகவும், சுகாதாரமாகவும், தரமான மற்றும் நியாயமான விலையில் புரதச்சத்து மிகுந்த மீன்கள் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கோவை மாநகரத்திலும் செயல்படுத்திட கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது காந்திபுரம் மின் வாரியத்திற்கு அருகில் கழக அங்காடிக்கு கோவை மாநகராட்சியால் (10'x11') இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தில் சற்று கூடுதல் இடம் (25'x20') தேவைப்படுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்திற்கு நவீன மீன் அங்காடி அமைக்க கூடுதல் இடம் வழங்குவது குறித்து முடிவு செய்யவும், அதற்குண்டான மாதாந்திர உரிமக் கட்டணத்தை நடைமுறையில் உள்ள விதிமுறைகளின் படி நிர்ணயம் செய்து பெறுவது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்ற தீர்மானம் எண் 359 நாள் 19.02.2009-ன் மூலம் சம்பந்தப்பட்ட வார்டு மாமன்ற உறுப்பினர், மண்டலத்தலைவர் ஆகியோருடன் இடத்தை ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்பொழுது மேற்கண்ட இடம் மண்டல தலைவர், மாமன்ற உறுப்பினர் மற்றும் உதவி நிர்வாக பொறியாளர் ஆகியோரால் நேராய்வு செய்யப்பட்டு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு (25'X 20') அளவிலான கூடுதல் இடம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் மாமன்றத்தில் ஒப்புதல் வேண்டி மீண்டும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -அனுமதிக்கலாம் ந.க.எண் :15404/2007/ அ4/ வ

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 37 நாள்: 22.06.2009**

போக்குவரத்து இடையூறு ஏற்படாத வண்ணம், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு 25' X 20' அளவுள்ள இடம் ஒதுக்கீடு செய்யவும், அதற்குண்டான மாதாந்திர வாடகையினை நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி நிர்ணயம் செய்து வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 38**

கோயம்புத்தூர் மாநகரில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வ.உ.சிதம்பரம்பிள்ளை பூங்கா திடலில், வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் திருவுருவ சிலை அமைக்க அனுமதி கோரிய, நவபாரத திருமண அமைப்பாளர்கள் சங்க தலைவர் அவர்களின் மனு நாள் 30.08.2007 –ன் அடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால், கடிதம் ந.க.எண். 51928/07/இ3 நாள். 01.06.2009-ன் மூலம் உரிய கருத்துரு வழங்க கோரப்பட்டுள்ளது.

வ.உ.சிதம்பரனார் பூங்கா திடலில், அரசியல் மற்றும் அனைத்து சமூக கூட்டங்கள் மற்றும் நுகர்வோர் கண்காட்சிகள் ஆகிய பொது நிகழ்ச்சிகள் அதிக அளவில் நடைபெறுவதால் மேற்கண்ட பூங்கா திடலில் சிலை அமைத்தால் பாதுகாப்பானதாக இருக்காது என்ற சூழ்நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வ.உ.சிதம்பரனார் பூங்காவின் உட்பகுதியில் வார்டு எண் 1 பிளாக் எண் 13 சர்வே எண் 923/1 பகுதியில் சிலை அமைக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அரசாணை நிலை எண். 221 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20.11.1998 – ன் படி புதிதாக சிலை நிறுவுவதற்கு கீழ்கண்ட நடைமுறைகள் பின்பற்ற வேண்டும்.

நிபந்தனை

(1) புதிதாக சிலை வைப்பதாக இருந்தால் அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்படவேண்டும்
(2) சிலைகள் வெண்கலத்தால் நிறுவப்படல் வேண்டும்
(3) சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், மாநகராட்சியால் பராமரிக்க இயலாது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 5580/09/MH5

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 38 நாள்: 22.06.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 39**

கோயம்புத்தூர் மாநகராட்சி ரேஸ்கோர்ஸ் பகுதியில் போர் நினைவு சின்னம் அமைக்க அனுமதி கோரியுள்ள முன்னாள் படை வீரர் நலம், ஹானரரி கேப்டன் எஸ்.எஸ். காந்தி அவர்கள் மனு நாள். 09.06.2008 துணை இயக்குநர், முன்னாள் படை வீரர் நல அலுவலகம் கோவை அவர்கள் கடிதம் ந.க.எண். 1948/08/அ5. நாள் 12.08.2008, மற்றும் ஸ்டேசன் கமான்டர் ரெட்பீல்டஸ் கோவை கடிதம் எண். 210/1.ஏ. நாள் 8.12.2008 ஆகியோர்களது மனுக்களின் கோரிக்கையின்படி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கடிதம் ந.க.எண். 52312/08/அ3 நாள். 27.05.2009 –ன் மூலம் கீழ் குறிப்பிட்டுள்ள இடங்களில்

(1) ரேஸ்கோர்ஸ் சாலையில் சி.எஸ்.ஐ ஆலயத்திற்கு எதிரில்,
(2) ரேஸ்கோர்ஸ் சாலையில் தாமஸ் பார்க் அருகில்,
(3) ரேஸ்கோர்ஸ் சாலையில் இருந்து சுங்கம் சாலைக்கு பிரியும் இடம் ஆகிய பகுதிகளில் ஏதாவது ஓர் இடத்தில் இந்தப் போர் நினைவு சின்னம் அமைக்க உரிய கருத்துரு வழங்க கோரப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள தாமஸ் பார்க்அருகில் தேர்தல் வார்டு எண். 26 பகுதியில் முன்னாள் படை வீரர் நல அலுவலகம் கேட்டுக்கொண்டபடி போர் நினைவு சின்னம் அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அரசாணை நிலை எண். 221 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20.11.1998– ன் படி புதிதாக சிலை நிறுவுவதற்கு கீழ்கண்ட நடைமுறைகள் பின்பற்ற வேண்டும்.

நிபந்தனை

(1) புதிதாக சிலை வைப்பதாக இருந்தால் அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்படவேண்டும்
(2) சிலைகள் வெண்கலத்தால் நிறுவப்படல் வேண்டும்
(3) சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், மாநகராட்சியால் பராமரிக்க இயலாது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5579/09/MH5

## மாநகர மன்ற தீர்மானம் எண்: 39 நாள்: 22.06.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 40

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவில் கட்டிட கட்டுமானம், மராமத்து பணிகள் போன்றவற்றிற்கு விலை விபர அட்டவணை தயாரிக்க தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர், சென்னை அவர்களின் அனுமதி எண் HDO/25440/2009/Dated 21-05-2009-ல் அனுமதி வழங்கப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. 2009-2010ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை 01-04-2009 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின்மூலம் சாலைப் பணிகளுக்கும் 2009-2010-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை நெடுஞ்சாலை துறை உத்திரவு எண்.469/CONTRACT-2/2009 Dated 27-05-2009-ன் படி அனுமதிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. இவ்விலை விபர அட்டவணை 01-04-2009 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட 2009-2010-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும், பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம் ந.க.எண். 4386 /2009/TA

## மாநகர மன்ற தீர்மானம் எண்: 40 நாள்: 22.06.2009

அலுவலகக் குறிப்பு பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 41

பொருள் : கோவை மாநகராட்சி – 12வது நிதிக்குழு பரிந்துரை மானிய நிதியின் கீழ் 2008-09-ம் ஆண்டுக்கான கோவை மாநகராட்சிக்கு ரூ.4,09,38,222/- ஒதுக்கீடு செய்யப்பட்டு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளதற்கு பணிகள் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடர்பு.

----------------

12- வது நிதிக்குழு பரிந்துரை நிதியின் கீழ் 2008 – 2009 ம் ஆண்டுக்கு கோவை மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் ந.க.எண்.23529 /2008/P2 நாள் 25-09-2008 மற்றும் 11-02-2009-ன் படியும் மானியத் தொகை ரூ.4,09,38,222 /- விடுவிக்கப்பட்டுள்ளது.

இதில், 50% மானியம் ரூ.2,04,69,111/- திடக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்கும், 25% மானியம் ரூ1,02,34,555/- சாலைகள் மற்றும் வடிகால் பராமரிப்புப் பணிகளுக்கும், 25% இதர பணிகளான மின் ஆளுமைப் பணிகள் மற்றும் மின் கட்டணம் செலுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து மானியம் ரூ.4,09,38,222/- விடுவிக்கப்பட்டுள்ளது.

12-வது நிதிக்குழு மானியத்தின் கீழ் 2008-2009 ஆம் ஆண்டுக்கான கோவை மாநகராட்சி மேற்கொள்ளப்படவுள்ள திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், சாலைகள் மற்றும் வடிகால் பராமரிப்புப் பணிகள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்படுகிறது.

**I. திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் :-**

| வ. எண் | பணியின் பெயர் | 12-வது நிதிக்குழு மானிய ஒதுக்கீட்டுத் தொகை | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | சிறிய அளவிலான காம்பேக்டர்ஸ் (mini Compactors) வாங்கி வழங்குதல் | ரூ.2,04,69,111/- | 4 | ரூ. 80,00,000/- |
| 2 | சக்கரங்கள் கொண்ட 660 லிட்டர் கொள்ளளவுள்ள இரும்பினாலான குப்பை சேகரிக்கும் தொட்டி வாங்கி வழங்குதல் (660 litres capacity wheeled G.I.Sheet waste storage bins.) | | 500 | ரூ.1,25,00,000/- |
| | மொத்தம் | ரூ.2,04,69,111/- | | ரூ. 2,05,00,000/- |

**II . சாலை மற்றும் வடிகால் பராமரிப்புப் பணிகள் :-**

| வ. எண் | பணியின் பெயர் | 12-வது நிதிக்குழு மானிய ஒதுக்கீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 6 – ல் திருச்சி சாலையில் தென் பகுதியில் மேம்பாலத்திற்கு அருகில் மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல் | ரூ.1,02,34,555/ | ரூ. 20,00,000/- |
| 2. | தெற்கு மண்டலம் வார்டு எண்.28, பட்டேல் சாலையை புதுப்பித்தல் | | ரூ. 20,00,000 /- |
| 3. | வார்டு எண் 72 ல் காந்திமா நகர் (பேருந்து தடத்தில்) விஜயா உணவகம் முதல் கிழக்கு கோடி வரை தார் சாலை புதுப்பித்தல் | | ரூ. 25,00,000 /- |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| **4.** | வார்டு எண் 20 காட்டூர் சாலை மற்றும் புதிய திட்ட சாலைகளில் மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல் மற்றும் நடைபாதை அமைத்தல் | | ரூ. 25,00,000 /- |
| **5.** | வார்டு எண்.55 தெலுங்குபாளையம் பாரதி சாலையை புதுப்பித்தல் | | ரூ. 25,00,000 /- |
| | மொத்தம் | ரூ.1,02,34,555/- | ரூ.1,15,00,000/- |

III மின் கட்டணம் மற்றும் மின் ஆளுமைப் பணிகளுக்கு ரூ.1,02,34,555/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு 12- வது நிதிக்குழு பரிந்துரை மானியத்தின் கீழ் கோவை மாநகராட்சி ரூ.1,02,34,555/- மின் கட்டணம் செலுத்தி செலவிடப்பட்டுள்ளது.

12–வது நிதிக்குழு பரிந்துரை மானிய நிதியின் கீழ் 2008-2009 கோவை மாநகராட்சிக்கு மானியத் தொகையில் ரூ.3,07,03,666/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு, மதிப்பீட்டுத் தொகை ரூ 3,20,00,000/-ற்கு பணிகள் மேற்கொள்ளவும், ஒதுக்கீட்டுத் தொகையை விட செலவினத் தொகை அதிகமாயின் மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.1542 / 2009 /ப.வ.(எம்)

## மாநகர மன்ற தீர்மானம் எண்: 41 நாள்: 22.06.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 42

பொருள் : தேர்தல் - 2009, பாராளுமன்றத் தேர்தல் - பிறமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது – மேற்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை தேர்தலுக்கு பயன்படுத்த தயார் செய்ய ஏற்பட்ட செலவினங்கள் - தொடர்பாக.

பார்வை : 1) முதன்மை தேர்தல் ஆணையர் மற்றும் அரசு கூடுதல் செயலர் கடித எண் 8702/2009-16, நாள் 25.4.2009.

2) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் கடித எண். 3121/2009/O5, நாள் 8.5.2009.

3) கோவை மாநகராட்சி ஆணையாளரின் கடித எண். 5431/2009/தேர்தல் நாள் 3.6.2009.

\- - - -

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டபடி கோவை மாநகராட்சி செயற் பொறியாளர்கள் திரு. திருமாவளவன், திரு. கணேஷ்வரன் மற்றும் மேற்கு மண்டல உதவி நகரமைப்பு அலுவலர் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் கேரள மாநிலம், திருவனந்தபுரம், எர்ணாகுளம் மற்றும் கோழிக்கோடு ஆகிய ஊர்களிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (கட்டுப்பாட்டு அலகு மற்றும் வாக்கிடும் அலகு) ( **Control Unit and Ballot Unit)** கோயம்புத்தூர் மாவட்ட தேர்தல் பணிக்காக கொண்டு வந்த செலவினங்கள் பின்வருமாறு

1. திரு. திருமாவளவன், செயற் பொறியாளர்
(திருவனந்தபுரத்திலிருந்து கோயம்புத்தூருக்கு கொண்டு வந்த வகையில் )

| | |
|---|---|
| லாரி எண் KL-9F-8766 வாடகை | ரூ. 8000/- |
| லாரி எண் KL-13-1991 வாடகை | ரூ. 16600/- |
| ஏற்றுக் கூலி | ரூ. 4880/- |
| கார் எண் TN-37-AZ-3666 வாடகை | ரூ. 8000/- |
| அறை வாடகை | ரூ. 300/- |
| மொத்தம் | ரூ. 37780/- |

2. திரு. கணேஷ்வரன், செயற் பொறியாளர்
(எர்ணாகுளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு கொண்டு வந்த வகையில் )

| | |
|---|---|
| லாரி எண்கள் KED 8437, KL-10-8595, KL-7M-6930 வாடகை (லாரி ஒன்றுக்கு ரூ. 11550/- வீதம்) | ரூ. 34650/- |
| கார் வாடகை | ரூ. 6600/- |
| ஏற்றுக் கூலி | ரூ. 9120/- |
| மொத்தம் | ரூ. 50370/- |

3. திரு. ரவிச்சந்திரன், உதவி நகரமைப்பு அலுவலர்
(கோழிக்கோட்டிலிருந்து கோயம்புத்தூருக்கு கொண்டு வந்த வகையில் )

| | |
|---|---|
| லாரி எண்கள் KL-13A-1420, KL-11A-5171வாடகை (லாரி ஒன்றுக்கு ரூ. 13100/- வீதம்) | ரூ. 26200/- |
| கார் வாடகை | ரூ. 4376/- |
| ஏற்றுக் கூலி | ரூ. 9000/- |
| மொத்தம் | ரூ. 39576/- |

4. கோவை ரயில் நிலையத்திலிருந்து வடகோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு வந்தது மற்றும் மேற்படி இயந்திரங்களை ECIL நிறுவனப் பொறியாளர்கள் சோதனை செய்ய ஏற்பாடுகள் செய்த வகையில்

| | ரூ. |
|---|---|
| 304 பெட்டிகளுக்கு இறக்கு கூலி (எர்ணாகுளத்திலிருந்து வரப்பெற்றவை) | 3,050/- |
| 208 பெட்டிகளுக்கு இறக்கு கூலி (திருவனந்தபுரத்திலிருந்து வரப்பெற்றவை) | 2,080/- |
| 120 பெட்டிகளுக்கு இறக்கு கூலி (கோழிக்கோட்டிலிருந்து வரப்பெற்றவை) | 1,200/- |
| 75 பெட்டிகளுக்கு ஏற்றுக்கூலி (வடகோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியிலிருந்து அரசினர் பொறியியல் கல்லூரிக்கு) | 750/- |
| 84 பெட்டிகளுக்கு ஏற்றுக்கூலி (வடகோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியிலிருந்து அரசினர் பொறியியல் கல்லூரிக்கு) | 840/- |
| கோவை ரயில்நிலையத்திலிருந்து வடகோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு 6 லாரிகள் மூலம் 600 பெட்டிகள் எடுத்து சென்ற வாடகை மற்றும் பெட்டிகளை ஏற்றுக் கூலி மற்றும் இறக்கு கூலி (நாள் 30.4.09) | 32,000/- |
| தொடர்வண்டியிலிருந்து 212 பெட்டிகள் இறக்கி லாரிக்கு ஏற்றிய கூலி (நாள் 10.5.09) | 18,100/- |
| கோவை ரயில்நிலையத்திலிருந்து வடகோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு 212 பெட்டிகள் லாரி மூலம் கொண்டு சென்ற வாடகை (நாள் 10.5.09) | 4,000/- |
| பள்ளியில் 212 பெட்டிகள் இறக்கிவைத்த வகையில் இறக்கு கூலி | 2,130/- |
| ECIL நிறுவனப் பொறியாளர்கள் சோதனை செய்ய ஏற்பாடுகள் செய்த வகையில் (மின் விளக்குகள், மின் விசிறிகள், மேசை, நாற்காலிகள், பந்தல் வாடகை) (30.4.09-12.5.09) 13 நாட்களுக்கு. | 98,452/- |
| மொத்தம் | 1,62,602/- |

5. மேற்படி 1445 மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களை ECIL நிறுவனப் பொறியாளர்கள் சோதனை செய்ய வசதியாக வைப்பறையிலிருந்து (Store Room) மேசைகளுக்கு கொண்டு சென்றது மற்றும் திரும்பவும் வைப்பறையில் சேர்த்தது இவற்றுக்கான கூலி ரூ. 1,01,150/-

அனைத்து இனங்களையும் சேர்த்து மொத்தம் செலவு (1) முதல் (5) முடிய ரூ. 3,91,478/-

(ரூபாய் மூன்று லட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து நானூற்று எழுபத்தி எட்டு மட்டும்).

மேற்குறித்த செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிடக்கோரி பார்வை-3-ல் காணும் மாநகராட்சி ஆணையரின் கடிதம், கோவை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வாயிலாக தமிழக முதன்மை தேர்தல் ஆணையர் மற்றும் அரசு கூடுதல் செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு வரப்பெறாத காரணத்தால் அவசர நிலை கருதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்படி செலவினங்களுக்கு தொகை வழங்கிடவும் நிதி ஒதுக்கீடு வரப்பெற்ற பின்னர் தொகை பெற்று மாநகராட்சி பொது நிதிக்கு சரிக்கட்டல் செய்திடவும் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கண்ட செலவினத்திற்கு தொகை வழங்கவும், தமிழ்நாடு மாநில முதன்மை தேர்தல் அலுவலரிடமிருந்து நிதி ஒதுக்கீடு வரப்பெற்றதும் இத்தொகையினை மாநகராட்சி பொது நிதியில் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 5431/2009/ தேர்தல்

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 42 நாள்: 22.06.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 43

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமாக பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி அரசு ஆணை எண் 551(4) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.11.2007–ல் பெறப்பட்டு குடிநீர் திட்டப்பணியினை ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. கீழ்க்கண்ட நான்கு சிப்பங்களுக்கு (II,IV,V & VI) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் விபரங்கள் கீழ்வருமாறு.

| சிப்பம் | பணியின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|
| II | பெரிய கோம்பை மலை குகை வெளியேற்றத்திலிருந்து வெள்ளியங்காடு சுத்திகரிப்பு நிலையம் வரை 1500 எம். எம் விட்டம் உள்ள பி.எஸ்.சி (PSC) குழாய் பதிக்கும் பணி | 2,32,52,256.00 | தி/ள். இந்தியன் ஹியூம் பைப் கம்பெனி லிட், மும்பை |
| IV | வெள்ளியங்காடு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கட்டன் மலை குகை நுழைவு வரை பிரதான குழாய் அமைக்கும் பணி. | 25,87,16,169.00 | தி/ள். நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் லிமிடெட், ஹைதராபாத். |

| | | | |
|---|---|---|---|
| V | கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை பிரதான குழாய் அமைக்கும் பணி. | 57,16,88,744.00 | தி/ள். நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் லிமிடெட், ஹைதராபாத். |
| VI | இராமகிருஷ்ணாபுரத்தில் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி | 4,61,90,500.00 | தி/ள்.ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர். |

மொத்த ஒப்பந்த மதிப்பு ரூ. 89,98,47,669/–

மேற்கண்ட பணிகளில் வரும் 1000மிமீ விட்டம் முதல் 1500 மிமீ விட்டமுள்ள MS Spirally Welded பைப்புகள் PSC பைப்புகள் தயாரிப்பு பணியிலும் மற்றும் சுவிஸ் வால்வுகள், பெண்டு, ஏர்வால்வுகள் தயாரிக்கும் நிலையிலும் உள்ளது. இந்நிலையில் பைப் இணைப்புகளில் வரும் பைப் மற்றும் இதர இணைப்பு Specials தயாரிப்பு நிலையில் தரம் உறுதிசெய்யும் பொருட்டு "மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு (Third Party Quality Inspection)" பிற துறைகளில் உள்ளவாறு மேற்கொள்ள வேண்டி உள்ளது. மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாட்டு ஆய்வினை தகுதிபெற்ற நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்கள், தமிழ்நாடு குடிநீர்வாரியம் மற்றும் சென்னை மெட்ரோ வாரியத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கவும், அதற்காகும் செலவினம் சுமார் 30,00,000/– க்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –
1) பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டப் பணியான சிப்பம் II, IV, V & VI ஆகிய பணிகளுக்கான குழாய்கள் மற்றும் வால்வுகள் ஆகியவற்றின் "மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை (Third Party Quality Inspection)" –க்கு ஒப்பந்தப்புள்ளியினை வரவேற்க மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிகளுக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.30,00,000/– மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 3898/09/JN5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 43 நாள்: 22.06.2009</u>

மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனைக்கு நியமனம் செய்யப்படும் நிறுவனத்திற்கு வழங்க ஆகும் செலவுத் தொகையான ரூ.30.00 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 44

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம். ரூ. 377.13 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஆணை (3டி) எண்: 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி – 3) துறை நாள்: 24.10.2007–மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் சிப்பம் I பகுதி பணியின் விபரம்:

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | திருத்திய தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| I | பாதாள சாக்கடைத்திட்டம் – மண்டலங்கள் – I, II, V மற்றும் VI-ல் கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.7805.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 52 / 2008–09 நாள் 03.10.2008 |

இப்பணிக்கு மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில், கடந்த 29.04.2009–ல் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s. Subaya Constructions Company Ltd., Chennai**
   **(தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை)**

2. **M/s. Simplex Infrastructures Ltd., Kolkata,**
   **(தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா)**

மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதியினை மாநகராட்சியின் ஒப்பந்த கூராய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழுவின் (Technical Standing Committee) ஆய்விற்கு அனுப்பப்பட்டது. கடந்த 25.05.2009–ல் நடைபெற்ற மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழுக்கூட்டத்தில் மேற்படி இரு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி உறுதி செய்யப்பட்டதால், 05.06.2009–ல் இரு நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளிகள் (Financial Bid) திறக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | நிறுவனம் வழங்கிய ஒப்பந்தவிலைப்புள்ளி விபரம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (கூடுதல்) சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை. | ரூ.57,57,23,559.00 | ரூ.78,19,28,967.50<br>(தனது ஒப்பந்தவிலைப்புள்ளியுடன் இந்நிறுவனம் தன்னால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையில் 10.90 % தள்ளுபடி செய்து பணியினை மேற்கொள்ள வழங்கிய ஒப்புதல் கடிதத்திற்குப் பின் ஒப்பந்த விலைப்புள்ளி தொகை)<br>ரூ.69,66,98,710.00 | 31.91%<br>21.01 % |
| 2 | தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா. | | 102,89,53,554.50 | 78.72% |

மேற்கண்ட நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் ஒப்புநோக்கு பட்டியலின்படி, இரு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை, நிறுவனத்திடம் நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் விதி எண்: 2.8–ன் படி விலை குறைப்பு செய்திட சம்மத கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பேரில் இந்நிறுவனத்திடமிருந்து கடந்த 15.06.2009–ல் பெறப்பட்ட விலைகுறைப்பு கடிதத்தின் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | (விலைக்குறைப்பிற்கு பின்னர்) ஒப்பந்தவிலைப் புள்ளிவிபரம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை. | ரூ.57,57,23,559.00 | ரூ.69,66,98,710.00<br>நாள் 05.06.2009 | | | 21.01% |
| | | | 0.015% ஒப்பந்த விலைப்புள்ளிக்கு குறைவு | 15.06.2009 | (0.015% குறைப்பு)<br>ரூ.69,65,94,205.00 | 20.99% |

மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தவிலைப்புள்ளி விலைகுறைப்புக்கு பின்னர் தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை, என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 20.99 % அதிகமாக உள்ளதால், மேற்படி ஒப்பந்த விலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணிக்கு மூன்றாம் முறையாக 29.04.2009–ல் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பட்ட இரு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் குறைவானதும், ஒப்பந்த விலைப்புள்ளியுடன் தள்ளுபடி செய்து சம்மத கடிதம் இணைத்து வழங்கியுள்ள தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிட்., சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு ஒப்பந்த தொகையினை விட, 20.99% சதவீதம் கூடுதலாக உள்ளதால், 5% சதவீதத்திற்கு கூடுதலாக உள்ள ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான ''ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு'' அரசால் அரசாணை எண்.34 ந.நி.ம.கு.வ (ந.நி–II) துறை நாள்: 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டுள்ளதால் ''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகையில் இந்த சிப்பப் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1684/09 / ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 44 நாள்: 22.06.2009</u>

அ) மூன்றாவது அழைப்பில் வரப்பட்ட இரு ஒப்பந்த விலைப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்த விலைப்புள்ளியும், விலைக்குறைப்பிற்குப்பின்னரும் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையினைவிட 20.99 சதவீதம் கூடுதலாக தந்துள்ள தி/வா. சுப்பையா கன்ஸ்ட்ரக்சன்ஸ் கம்பெனி லிட், சென்னை அவர்களின் ஒப்பந்த விலைப்புள்ளியினை '' மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' வின் பரிசீலனைக்கு அனுப்பவும், அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையினைவிட இந்த சிப்பப்பணி மேற்கொண்டால் ஆகும் கூடுதல் செலவினத்தை, மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கபட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 45

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம். ரூ. 377.13 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஆணை (3டி) எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–3) துறை நாள்: 24.10.2007–மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் சிப்பம் II பகுதி பணியின் விபரம்:

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | திருத்திய தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| II | பாதாள சாக்கடைத்திட்டம் – மண்டலங்கள் – III மற்றும் VII-ல் கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.5708.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 27 / 2008–09 நாள் 10.06.08 |

இப்பணிக்கு மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில், கடந்த 29.04.2009–ல் கீழ்கண்ட நான்கு நிறுவனங்கள் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s. SEW-SCCL, Consordium (JV), Hyderabad,**
   (தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத்)

2. **M/s. IVRCL Infrastructures & Projects, Ltd., Chennai.**
   (தி/ள். ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் & புராஜக்ட்ஸ் லிட்., சென்னை)

3. **M/s. Jothi Engg Co – Siva Engg Co. (JV) - Tiruppur**
   (தி/ள். ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி – சிவா இன்ஜினியரிங் கம்பெனி. (ஜே.வி) திருப்பூர்

4. **M/s. Simplex Infrastructures Ltd., Kolkata.**
   (தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா.)

மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதியினை மாநகராட்சியின் ஒப்பந்த கூராய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழுவின் (Technical Standing Committee) ஆய்விற்கு அனுப்பப்பட்டது. கடந்த 25.05.2009–ல் நடைபெற்ற மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழு கூட்டத்தில் மேற்படி நான்கு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி உறுதி செய்யப்பட்டதால், 05.06.2009–ல் நான்கு நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளிகள் (Financial Bid) திறக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு :

<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனம்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை</th><th>நிறுவனம் வழங்கிய ஒப்பந்தவிலைப்புள்ளி விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (கூடுதல்) சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி) ஐதராபாத்.</td><td rowspan="2">ரூ.47,94,93,564.00</td><td>ரூ.63,17,51,079.30</td><td>31.75%</td></tr>
<tr><td>2</td><td>தி/ள். ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் & புராஜக்ட்ஸ் லிட்., சென்னை.</td><td>ரூ.68,31,02,654.50<br><br>(தனது ஒப்பந்தவிலைப்புள்ளியுடன் இந்நிறுவனம் தன்னால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையில் 4.00% தள்ளுபடி செய்து பணியினை மேற்கொள்ள வழங்கிய ஒப்புதல் கடிதத்திற்குப் பின் ஒப்பந்தவிலைப்புள்ளி தொகை) ரூ.65,57,78,548.00</td><td>42.46%<br><br>36.76%</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | தி/ள். ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி – சிவா இன்ஜினியரிங் கம்பெனி (ஜே.வி) திருப்பூர். | | ரூ.66,12,65,255.00 | 37.91% |
| 4 | தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா. | | ரூ.87,18,05,658.90 | 81.82% |

மேற்கண்ட நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் ஒப்புநோக்கு பட்டியலின்படி, நான்கு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத், நிறுவனத்திடம் நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் விதி எண். 2.8–ன் படி விலைகுறைப்பு செய்திட சம்மத கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பேரில் இந்நிறுவனத்திடமிருந்து கீழ்கண்ட மூன்று தேதிகளில் பெறப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு :

| வ. எ ண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | (விலைக் குறைப்பிற்கு பின்னர்) ஒப்பந்தவிலைப் புள்ளிவிபரம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக் கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத், | ரூ.47,94,93,564.00 | ரூ.63,17,51,079.30 நாள் 05.06.2009 | | | 31.75% |
| | | | 0.02% ஒப்பந்த விலைப்புள்ளிக்கு குறைவு | 06.06.09 | (0.02% குறைப்பு) ரூ.63,16,51,079.30 | 31.73% |
| | | | 0.70% ஒப்பந்த விலைப்புள்ளிக்கு குறைவு | 09.06.09 | (0.70% குறைப்பு) ரூ.62,73,28,821.80 | 30.83% |
| | | | 1.3582% ஒப்பந்த விலைப்புள்ளிக்கு குறைவு | 13.06.09 | (1.3582% குறைப்பு) ரூ.62,31,70,205.00 | 29.96 % |

மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தவிலைப்புள்ளி மூன்றாவது முறையாக விலைகுறைப்புக்கு பின்னர் தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத், என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 29.96%அதிகமாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணிக்கு மூன்றாம் முறையாக 29.04.2009–ல் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பட்ட நான்கு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கியுள்ள தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஐதராபாத், நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு தொகையினை விட, 29.96% சதவீதம் கூடுதலாக உள்ளதால், 5% சதவீதத்திற்கு கூடுதலாக உள்ள ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான ''ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு'' அரசால் அரசாணை எண்.34 ந.நி.ம.கு.வ துறை நாள்: 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டுள்ளதால் ''மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகையில் இந்த சிப்பப் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1468/09/ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 45 நாள்: 22.06.2009</u>

(அ) மூன்றாவது அழைப்பில் வரப்பட்ட நான்கு ஒப்பந்த விலைப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்த விலைப்புள்ளியும், மூன்றாவது விலைக் குறைப்பிற்குப் பின்னரும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகையைவிட 29.96% சதவீதம் கூடுதலாக தந்தள்ள தி/வா. எஸ்..இ.டபிள்யூ - எஸ்.சி.சி.எல். கன்சார்டியம் (ஜே.வி), ஹைதராபாத் அவர்களின் ஒப்பந்த விலைப்புள்ளியினை "மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு"வின் பரிசீலனைக்கு அனுப்பவும் அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையினைவிட இந்த சிப்பப் பணி மேற்கொண்டால் ஆகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 46

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம். ரூ. 377.13 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஆணை (3டி) எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–3) துறை நாள்: 24.10.2007–மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் சிப்பம் III பகுதி பணியின் விபரம்

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | திருத்திய தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| III | பாதாள சாக்கடைத்திட்டம் – மண்டலங்கள் – IV மற்றும் VIII-ல் கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.13333.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 15 / 2008–09 நாள் 10.06.08 |

இப்பணிக்கு மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில், கடந்த 29.04.2009–ல் கீழ்கண்ட நான்கு நிறுவனங்கள் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s. SEW-SCCL, Consordium (JV), Hyderabad,**
   (தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி), ஹைதராபாத்)

2. **M/s. IVRCL Infrastructures & Projects, Ltd., Chennai.**
   (தி/ள். ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் & புராஜக்ட்ஸ் லிட்., சென்னை)

3. **M/s. TVRCPL – HNBEPL (JV), Hyderabad**
   (தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி.), ஹைதராபாத்)

### 4. M/s. Simplex Infrastructures Ltd., Kolkata.
### (தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா.)

மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதியினை மாநகராட்சியின் ஒப்பந்த கூராய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழுவின் (Technical Standing Committee) ஆய்விற்கு அனுப்பப்பட்டது. கடந்த 25.05.2009–ல் நடைபெற்ற மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழு கூட்டத்தில் மேற்படி நான்கு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி உறுதி செய்யப்பட்டதால் 05.06.2009–ல் நான்கு நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளிகள் (Financial Bid) திறக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு:

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | நிறுவனம் வழங்கிய ஒப்பந்தவிலைப்புள்ளி விபரம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (கூடுதல்) சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தி/ள். எஸ்.இ.டபிள்யூ – எஸ்.சி.சி.எல், கன்சார்டியம் (ஜே.வி) , ஐதராபாத். | ரூ.97,65,22,965.00 | ரூ.131,33,38,008.50<br><br>(தனது ஒப்பந்தவிலைப்புள்ளியுடன் இந்நிறுவனம் தன்னால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையில் 0.83% தள்ளுபடி செய்து பணியினை மேற்கொள்ள வழங்கிய ஒப்புதல் கடிதத்திற்குப் பின் ஒப்பந்தவிலைப்புள்ளி தொகை<br>ரூ.130,24,37,303.00 | 34.49%<br><br>33.37% |
| 2 | தி/ள். ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் & புராஜக்ட்ஸ் லிட்., சென்னை. | | ரூ.147,80,72,628.00<br><br>(தனது ஒப்பந்தவிலைப்புள்ளியுடன் இந்நிறுவனம் தன்னால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையில் 6% தள்ளுபடி செய்து பணியினை மேற்கொள்ள வழங்கிய ஒப்புதல் கடிதத்திற்குப் பின் ஒப்பந்தவிலைப்புள்ளி தொகை<br><br>ரூ.138,93,88,270.00 | 51.36%<br><br>42.28% |
| 3 | தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல். – ஹெச்.என்.பி.இ.பி.எல். (ஜே.வி.), ஹைதராபாத். | | ரூ.125,97,15,955.00 | 29.00% |
| 4 | தி/ள். சிம்ப்ளக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., கொல்கத்தா. | | ரூ.164,16,67,558.00 | 68.11% |

மேற்கண்ட நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் ஒப்புநோக்கு பட்டியலின்படி, நான்கு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல். – ஹெச்.என்.பி.இ.பிஎல் (ஜே.வி.), ஹைதராபாத் நிறுவனத்திடம் நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் விதி எண். 2.8–ன் படி விலைகுறைப்பு செய்திட சம்மத கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் பேரில் மேற்படி நிறுவனத்திடமிருந்து கீழ்கண்ட இரு தேதிகளில் பெறப்பட்ட விலைக்குறைப்புக்கு பின்னர், மதிப்பீட்டு ஒப்பந்த தொகையினைவிட 28.01% கூடுதலாக உள்ள ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்தவிலைப் புள்ளிவிபரம் (விலைக்குறைப்பிற்கு பின்னர்) | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தி/ள். டி.வி.ஆர்.சி.பி. எல். – ஹெச்.என்.பி. இ.பிஎல் (ஜே.வி.), ஹைதராபாத் | ரூ.97,65,22,965.00 | ரூ.125,97,15,955.00 நாள் 05.06.2009 | | | 29.00% |
| | | | **ஒப்பந்த விலைப்புள்ளிக்கு** (0.5% **குறைப்பு**) | 06.06.2009 | **(0.5% குறைப்பு)** ரூ.125,34,17,376.00 | 28.36% |
| | | | முதல் விலைகுறைப்பு தொகைக்கு (0.27% **குறைவு**) | 09.06.2009 | (0.27% **குறைவு**) ரூ.125,00,33,149.00 | 28.01% |

மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தவிலைப்புள்ளி இரண்டாவது முறையாக விலைகுறைப்புக்குப் பின்னரும் **M/s. TVRCPL – HNBEPL (JV), Hyderabad,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையினை விட 28.01% அதிகமாக உள்ளது. மேற்கண்ட நிறுவனத்திடம் விலைகுறைப்பு செய்திட கடந்த 11.06.2009–ல் மூன்றாவது முறையாக கோரப்பட்டதில், மேலும் விலைகுறைப்பு வழங்க இயலாத நிலையினை தனது 12.06.2009–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்தது. எனவே மதிப்பீட்டு ஒப்பந்தத்தொகைக்கு 28.01% அதிகமாக உள்ள ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணிக்கு மூன்றாம் முறையாக 29.04.2009–ல் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பட்ட நான்கு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கியுள்ள தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல் – ஹெச்.என்.பி.இ.பி.எல் (ஜே.வி.), ஹைதராபாத் நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு தொகையினை விட, 28.01% சதவீதம் கூடுதலாக உள்ளதால், 5% சதவீதத்திற்கு கூடுதலாக உள்ள ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான ‘‘ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு’’ அரசால் அரசாணை எண்.34 ந.நி.ம.கு.வ துறை நாள்: 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டுள்ளதால் ‘‘மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு’’ வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகையில் இந்த சிப்பப் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1469/09 / ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 46 நாள்: 22.06.2009</u>

அ) மூன்றாவது அழைப்பில் வரப்பட்ட நான்கு ஒப்பந்த விலைப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்த விலைப்புள்ளியும், இரண்டாவது விலைக்குறைப்பிற்குப் பின்னரும், ஒப்பந்த மதிப்பீட்டு தொகையினைவிட 28.01% சதவீதம் கூடுதலாக தந்துள்ள தி/வா. டி.வி.ஆர்.சி.பி.எல் - ஹெச்.என்.பி.இ.பி.எல் (ஜே.வி). ஹைதராபாத் அவர்களின் ஒப்பந்த விலைப்புள்ளியினை ‘‘மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு ’’வின் பரிசீலனைக்கு அனுப்பவும் அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையினைவிட இந்த சிப்பப் பணி மேற்கொண்டால் ஆகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி--

---

## பொருள் எண் 47

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள அரசு ஆணை எண்: 551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அதில் சிப்பம் (6) பணியான இராமகிருஷ்ணாபுரத்தில் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி ரூ.4.12 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

மேல்நிலைத் தொட்டி கட்டும் மாநகராட்சியின் இடம் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் திறந்தவெளியாக இருப்பதாலும், மேல்நிலைத்தொட்டி அமைக்கப்படவுள்ள இடத்தினை சுற்றியும் நீண்டகாலமாக குப்பைகள் கொட்டப்பட்டு உள்ளதாலும் சுமார் 1 மீட்டர் ஆழத்திற்கு 100 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள குப்பை மண் பகுதிகளை அவ்விடத்திலிருந்து அகற்றவும், மேல்நிலைத் தொட்டி கட்டும் இடம் பாதுகாப்பு இடத்தினை சுற்றிலும் சுமார் 500 மீட்டர் அளவுள்ள கான்கிரீட் பில்லர், செங்கல் சுவரிலான சுற்றுசுவர், நுழைவு கேட் மற்றும் 7.00 மீட்டர் x 8.00 மீட்டர் அளவுள்ள அலுவலக கண்காணிப்பு அறை (கீழ்தளம்), காவலர் அறை (மேல்தளம்) அமைக்கவும் வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் ரூ. 45.00 லட்சம் செலவாகுமென்பதால், இப்பணியினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவழித்து கட்ட மாமன்ற நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1) மேற்படி திட்டத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 4615/08/JN5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 47 நாள்: 22.06.2009</u>

இப்பணிக்கான செலவினம் ரூ. 45.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 48

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள அரசு ஆணை எண்: 551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அதில் சிப்பம் (3) பணியான வெள்ளியங்காட்டில் 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி ரூ. 28.60 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

வெள்ளியங்காட்டில் 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருந்து பெறப்பட்ட நிலப்பரப்பில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நடைபெறுகிறது.

மேற்படி இடத்தில் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் திறந்தவெளியாக இருப்பதாலும், மேலும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக இருப்பதாலும் அவ்விடத்தைச் சுற்றி சுமார் 1500 மீட்டர் நீளத்திற்கு செங்கல் சுவரிலான சுற்றுசுவர், கான்கிரீட் பில்லர் மற்றும் நுழைவு கேட் மற்றும் 7.00 மீட்டர் x 8.00 மீட்டர் அளவுள்ள அலுவலக கண்காணிப்பு அறை அமைக்கவும் வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் ரூ. 49.00 லட்சம் செலவாகுமென்பதால், இப்பணியினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவழித்து கட்ட மாமன்ற நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1) மேற்படி திட்டத்திற்கு மன்றம் நிர்வாகஅனுமதி வழங்கலாம்.
2) மேற்படி தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 4612/08/JN5

மாநகர மன்ற தீர்மானம் எண்: 48 நாள்: 22.06.2009

இப்பணிக்கான செலவினம் ரூ. 49.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 49

கோயம்புத்தூர் மாநகரில் பேருந்துகள் செல்லும் சாலைகளின் பல பகுதிகளில், பயணிகள் நிழற்குடைகள் அமைக்க, பல தனியார் நிறுவனங்களுக்கு மாநகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டதில் பல நிறுவனங்கள் பேருந்து நிழற்குடைகள் அமைத்துள்ளனர். கடந்த வருடம் அனுமதியற்ற விளம்பரங்களை அகற்றியதாலும் மற்றும் விளம்பரங்கள் செய்வது குறித்து அனுமதி வழங்கப்படாததாலும் பல நிறுவனங்கள் பயணிகள் நிழற்குடைகள் பராமரிக்கும் பணியினை நிறுத்திவிட்டனர்.

தற்பொழுது, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது ந.க.எண். 20954/08/இ3 நாள் 10.03.2009-ம் தேதிய செயல்முறை ஆணையில் கடந்த 09.09.2008 ம் தேதியில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் அவர்கள், மாநகரப் பகுதிகளில் ஒளிரும் பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் மேலும் இப்பணியினை தனியார் நிறுவனங்கள் மூலம் செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளதை சாலை பாதுகாப்புக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

அதனடிப்படையில், கோவை மாநகரில் பயணிகள் நிழற்குடை இல்லாத இடங்களில் ஒப்பந்தப்புள்ளி அல்லது EOI (Expression of Interest) மூலம் நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணிகள் நிழற்குடை அமைக்க அனுமதி வழங்க மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 5541/09/எம்.எச். 5

மாநகர மன்ற தீர்மானம் எண்: 49 நாள்: 22.06.2009

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 50

கோயம்புத்துர் மாநகராட்சியில் 72 வார்டுகளில் சுகாதார பணிகள் செய்ய ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதால் மழைநீர் வடிகால் சுத்தம் செய்ய முடியாமல் உள்ளது. மேலும் மாநகராட்சி பகுதிகள் விரிவடைவதால் சாக்கடை நீளமும் அதிகரித்துள்ளது. இதனை சுத்தம் செய்ய போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அனைத்து கட்சி கூட்டத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க சுகாதார நிலைக்குழு தீர்மான எண். 66/2008-09 நாள் 8.06.2009 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் உள்ள 72 வார்டுகளிலும் துப்புரவு பணியினை மேற்கொள்ள துப்புரவு பணியாளர்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், சுகாதார நிலைக்குழுவின் தீர்மானத்தை ஏற்றும் ஒப்பந்த அடிப்படையில் தேவையான துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்யவும், இப்பணியாளர்களைக் கொண்டு அனைத்துவிதமான துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்காகும் செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கவும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 5737/2009/ எம்.இ 5

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 50 நாள்: 22.06.2009**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 51

கோவை மாநகராட்சி பகுதிகளிலுள்ள 39 போக்குவரத்து சிக்னல்களை பராமரித்தல் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்துதல் முதலியவற்றை வியாபார நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்பொழுது விளம்பர பலகைகள் நிறுவுதல் முற்றிலும் நிறுத்தப்பட்டு உள்ளதால், மேற்படி சிக்னல்களில் மின்கட்டணம் செலுத்த இயலாத நிலையில் உள்ளதாக கோவை மாநகர காவல்துறை ஆணையாளர் அவர்களின் கடித எண் C.No. W3/37182/2009 நாள் 10.06.2009-ன்படி தெரிவித்துள்ளார்.

மேலும் போக்குவரத்து சாலை பாதுகாப்பு ஆய்வுக் கூட்டத்தில் மேற்படி சிக்னல்களுக்கு பயன்படுத்தப்படும் மின்கட்டணத்தை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

எனவே மேற்படி போக்குவரத்து சிக்னல்களுக்கு பயன்படுத்தப்படும் மின் கட்டணத்தை மாநகராட்சி தெருவிளக்கு மின்கட்டண (C.C. Charge) தலைப்பின்கீழ் உள்ள பொது நிதியிலிருந்து செலுத்தவும், மேலும் இச்செலவினை மாவட்ட ஆட்சியர் நிதி மீளப் பெறப்பட்டு ஈடு கட்டவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 7793/2008/ எம்.டி 3

**மாநகர மன்ற தீர்மானம் எண்: 51 நாள்: 22.06.2009**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி